"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

### முகவரி மாற்றம்

பாதுகாவலன் பத்திரிகை சம்பந்தமான எதுவிஷயத்திற்கும் (சந்தாப் பணம், விளம்பரங்கள், விடய தானங்கள் முதலியன) இனிமேல் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

நிர்வாக ஆசிரியர்,
"பாதுகாவலன்" அலுவலகம்,
மேற்றிராசன இல்லம்,
யாழ்ப்பாணம்.

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு புரட்டாதி மீ 1-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 10 | 35-ம் இலக்கம்

# வத்திக்கான் பொதுச்சங்கம் சித்திகரமாக

## கிறிஸ்தவர்களின் செபமும் பரித்தியாகமும் அவசியம்



இரண்டாவது வத்திக்கான் சங்கம் சித்திகரமாக நடைபெறல் வேண்டும்; வேண்டியபயன் தரல் வேண்டும் என்பதற்காக இரு வழிகளில் நாம் முயற்சித்தல் அவசியம்என எங்கள் பாப்பரசர் கேட்டுக்கொண்டிருக்கிறார். பக்தி நிறைந்த வேண்டுதலும் உடலை வருத்தும் பரித்தியாகமும்தான் இவையிரண்டும். நம்முடைய செபமும் தபமும் எவ்விதம் வேறொருவருக்கு அல்லது மேற்கூறிய சங்கத்துக்குப் பயன்படும் என்பதை ஆராய்வோம்.

கத்தோலிக்கராகிய நாம் செபம், செபத்தால்விளையும் நன்மைகள் ஆகியவற்றை நாளாந்த விஷயங்களில் ஒன்றாக எடுத்துக் கொள்கிறோம். நமக்குவரும் சிறிய துன்பத்தையும் சிரித்த முகத்துடன் ஏற்றுக்கொண்டால் அதனால் வேறொருவர் பயனடைவர் என நம்புகிறோம். ஆனால் கிறிஸ்தவரல்லாதோருக்கு இது நம்பமுடியாததொன்றாகவும் சில சமயங்களில்சிரிப்புக்குரிய தொன்றாகவும் தோன்றுகிறது.

நாம் கிறிஸ்துவில் ஒன்றித்திருக்கிறோம். நிஜவாழ்க்கையில் பிரிந்திருந்தாலும் இஷ்டப்பிரசாதத்தால் விளையும் இம்மாபெரும் ஒற்றுமையால் கிறிஸ்துவின் ஞானச்சரீரத்தில் நாமும் நம் சகோதரர்கள் அனைவரும் பிணைக்கப் பட்டிருக்கிறோம். இறைவனில் நம்பிக்கையும், அயலானில் அன்பும் மட்டுமே நம்மை இவ்விதம் பிணைக்கின்றன என்று கூறிவிட முடியாது. மின்சாரம்போல் எம்மூடாகப்பாயும் பரிசுத்த சீவியம் என்னும் உன்னதமான ஊற்றே நம்மனைவரையும் கிறிஸ்துவில் ஒன்றாகப் பிணைக்கிறது.

ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். கம்மியூனிசத்தின் பிடிப்பில் அல்லலுறும் நாடுகளாகிய கியூபா, சீனாபோன்றவர்கட்காக நாம் செபிப்பது, எம்மை ஒறுப்பது நல்லகாரியங்கள் மட்டுமல்ல, கிறிஸ்துவில் உள்ள மற்றைய ஒற்றுமைக்கு நாம் காட்டும் அபிமானமும் ஆகும். நம்முடைய உடலில் ஒருபாகத்தில் காயமேற்பட்டால் எப்படி உடல்முழுவதும் வருந்துகிறதோ அதே போல் நம்முடைய சகோதரர் வருந்தும்போது நாம் கண்களை மூடிவிட முடியாது. நம் ஆண்டவரின் வார்த்தைகள் இவ்வுண்மையை நிலைநாட்டியிருக்கின்றன,

(தொடர்ச்சி 3-ம்பக்கம்)

### வானொலியில் பிரகடனப்படுத்துவார் பரிசுத்த தந்தை

அடுத்துவரும் ஐப்பசித்திங்கள் பதினோராம் நாளில் வத்திக்கானில் திருச்சபையின் பொதுச்சங்கம் கூட்டப் படுகிறதல்லவா? இதற்கு முன்னோடியாகப் புரட்டாசிமாதம் பதினோராந் தேதி திருச்சபையின் தலைவர் இருபத்திமூன்றாம் அருளப்ப பாப்பரசர் வத்திக்கான் வானொலிமூலம் ஓர் செய்தியை அகில உலகத்துக்கும் பிரகடனப் படுத்துவார்.

# கைவிடப்பட்டவன் குணமானான்

ஜோஸ் அலக்சியோ கோமஸ் பத்துவயது நிரம்பியவன். காலில் ஏற்பட்ட புற்றுநோய்க்காக லிஸ்பன்நகரிலுள்ள புற்றுநோய் ஆராய்ச்சிக்கழகத்தில் பல மாதகாலம் வைத்தியம் செய்யப்பட்டான். ஈற்றில் மருத்துவர்கள் நம்பிக்கை இழந்தனர். பையன் வீட்டுக்கு அனுப்பப்பட்டான். சாவை எதிர்நோக்கிக்கொண்டிருந்த பையனின் மனதில் ஓரெண்ணம் உதித்தது. தன்னைப் பத்திமாபதிக்குக் கொண்டுசெல்லுமாறு தந்தையிடம் கேட்டுக் கொண்டான்.

தன்காலின் வேதனைகளையும் பொருட்படுத்தாது பத்திமாபதியிலுள்ள காட்சிச்சிற்றாலயத்தில் இரண்டுமணித்தியாலங்களாக அலக்சியோ முழந்தாளிட்டு உருக்கமாக வேண்டிக்கொண்டான். பின்னர் அங்கிருந்து எழுந்து சென்றவன் பத்திமாபதியின் புனிதநீரையும் பருகினான். அதன்மேல் தனக்கு உண்ண ஏதும் தரும்படி கேட்டுக்கொண்டான். பலவாரங்களாக உணவின்றியிருந்த பையன் இவ்விதம் கேட்பதையிட்டு முன்னர் அதிசயித்தவர்கள் அவன் பூரண குணமடைந்தான் என்பதைப் பின்னர் கண்டுகொண்டனர்.

முன்னர் அப்பையனுக்குச் சத்திரவைத்தியம் செய்த லிஸ்பன் புற்றுநோய் ஆராய்ச்சிக்கழக அதிகாரி பின்னர் அவனைப்பரிசோதித்துப் பையனிடம் வியக்கத்தகு மாறுதல் ஒன்றிருப்பதாக அறிக்கையிட்டார். ஆறுமாதங்களின்பின் மீண்டும் பையனைப் பரிசோதிக்க வேண்டுமென அவர் தெரிவித்தார். பையன் தற்போது தன்கிராம இல்லத்தில் பூரண குணமுற்றவனாக வசித்து வருகிறான்.

# தருமசபைக் கன்னியர்கட்கு அதிர்ஷ்டப்பரிசு

கடந்தவாரம் இந்தியாவின் தருமசபைக் கன்னியர்கள்பற்றியதோர் செய்தியைக் காவலன்பத்திரிகை வெளியிட்டது நேயர்கட்கு நினைவிருக்கலாம். அக்கன்னியர்கட்கு அண்மையில் அதிர்ஷ்டப்பரிசொன்று கிடைத்தது. ஆயினும் அவர்கள் அதிர்ஷ்டம் பார்ப்பதற்கான சீட்டுக்களைப் பெறவேயில்லை.

இருவாரங்கட்கு முன்னால் வயோதிபரான சீனர் ஒருவர் கல்கத்தாவிலுள்ள பிரபல தினசரிப் பத்திரிகையின் காரியாலயமொன்றினுள் நுழைந்தார். ஆசிரியரின் மேசையில் 555 ரூபாய்க்கு ஒரு காசோலையை வைத்தார். சுவீப் சீட்டொன்றில் தாம் இப்பணத்தைச் சம்பாதித்ததாகவும், நேர்மையாகவும் சிறந்தமுறையிலும் இயங்கும் ஒரு தரும நிறுவனத்தின் மூலம் இப்பணம் விநியோகிக்கப்படல் வேண்டுமெனவும் அவர் கூறினார்.

பத்திரிகைக் காரியாலயத்தார் தருமசபையெதுவெனத் தீர்மானிப்பதில் அதிகநேரம் செலவிடவில்லை. பாரதப்பிரதமரின் பாராட்டைப்பெற்றதும், ஜனாதிபதிகளின் கௌரவப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்ட ஒருகன்னிகையால் நிர்வகிக்கப்படுவதுமான தருமசபைக் கன்னியர்களின் தாபனத்துக்கு அப்பணத்தை அனுப்புவதென அவர்கள் உடனே தீர்மானித்து விட்டனர். தங்கள் தரும வேலைகட்காகப் பணம் சேர்ப்பதில் பல இன்னல்களையு மனுபவிக்கும் அந்தக்கன்னியர்கள் தங்களுக்கே அதிர்ஷ்டம் கிடைத்ததாக எண்ணி மகிழ்ச்சியடைந்தனர்.

# குழந்தை தெரேசுடன் விளையாடிய நங்கை

யேசுவின் சிறிய புஷ்பமான சின்னத்தெரேசாளைக் குழந்தையாயிருந்த காலத்தில் நன்கறிந்திருந்தவளான திருமதி மரியே பெனற் என்றமாது அண்மையில் தனது 106-வது வயதில் காலமானாள்.

இம்மாது 1877-ல் முதன்முதலாகச் சிறிய புஷ்பத்தைச் சந்தித்தாள். அப்போது குழந்தை தெரேசுக்கு வயது நான்கு. சில தினங்கட்கு முன்னர்தான் அன்னையையிழந்த தெரேசையும் அவளது இரண்டுசகோதரிகளையும் தெரேசின் தந்தையான மார்ட்டின், மரியே பெனற் வசித்த கிராமத்துக்கு அழைத்துவந்தார்.

அங்கு தெரேசின் மாமனாருடன் இம் மூவரும் தங்கினர். மாமனார் இறைச்சிக்கடையொன்றை நடாத்தினார். இக்கடை மேற்கூறிய மங்கையின் இல்லத்துக்குப் பக்கத்தில் அமைந்திருந்தது. அப்போது 22 வயதான மரியே பெனற் தனது வீட்டுச் சாளரங்களினூடாக இறைச்சிக்கடையை நோக்குவாள், அங்கு குழந்தை தெரேஸ் கடையின் வெளியேயும் உள்ளேயும் மாறிமாறி ஓடிக்

(தொடர்ச்சி 3-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது ஆபிரிக்கயாத்திரை—11

# அழகிய தீவுகளினூடாக

— வண. பிரான்சிஸ் ரிப்பேஅடிகளார்

நாங்கள்கண்ட மற்றத்தீவுகள் "லிப்பாரி," சலீனு, பஞரியாஆகியன. மிகவும் அழகான விந்தையான குன்றுகளை இங்கேகாணலாம். இவைகளைக் கடந்தவுடன் மிகத்தொலைவில் சிசிலி இருப்பதையும் காணலாம்.

விடியற்காலை எழுந்தவுடன் நான் கப்பலில் வேலைசெய்வோரின் வேறொரு ஆற்றலையும் கவனித்தேன். விடியற்காலையிலெழுந்து ஆறரைமணிக்குமுன் கப்பலின் தளங்கள் முழுவதையும் தண்ணீர்விட்டுக்கழுவிச் சுத்தம்செய்துவிட்டார்கள்.

மெசினு என்றுசொல்லப்படும் கடல் பிரிவால் நாம்செல்லும்போது இத்தாலியிலிருந்து சிசிலிக்குச்செல்லும் மின்சாரக்கம்பிகளைக் காணலாம். இத்தாலியிருக்கும் பக்கத்தில் பிரமாண்டமான கோட்டையொன்று கட்டப்பட்டிருக்கும் சில்லாஎன்னும் அழகிய சிறுதீவு கம்பீரமாக விளங்குகின்றது. இதற்கருகேயே கரிபிடிஸ் என்னும் சிறுதீவும் உண்டு. கரிபிடிசுக்குப்பின்னுல் சுமார் இரண்டுலட்சம் சனத்தொகையுள்ள மெசிஞநகாமுள்ளது. 1783-லும், 1908-லும் பயங்கரமான பூமிநடுக்கங்கள் இந்நகரத்தை நாசமாக்கின. இருந்தும் எனது தூரப்பார்வைக் கருவியினுல் பல அழகிய கோவில்களையும், கம்பீரமான கட்டிடங்களையும் காணமுடிந்தது. ஆசனக்கோவில் விசேஷஅழகுடன் திகழ்கிறது.

அடுத்ததாகப் பனியால்மூடப்பட்டுப் பத்தாயிரம்அடி உயர்ந்து ஐரோப்பாவிலேயே மிகப்பிரமாண்டமான எரிமலையாகிய எட்னு தெரிகிறது. ஒருபொழுதும மறக்கமுடியாத இந்தஎரிமலையைக் காணும்பொழுது 1928-ல் இதே எரிமலை பயங்கரமான நெருப்புக்குழம்புகளைக்கக்கி மஸ்க்காட்டிஎன்னும் நகரத்தைத் தரைமட்டமாக்கியது நினைவுக்கு வந்தது.

லண்டனிலிருந்து புறப்பட்டபின் 2,721மைல்களிலிருந்து எழுதுகிறேன். இன்றுமிகவும் குளிர்மையாக இருக்கிறது. அவ்வளவு வெய்யில்இல்லாதபடியால் கப்பல்பிரயாணத்தைவிட வேறு பிரயாணம் சந்தோஷமாகவே இராது என்று தோன்றுகிறது.

**3 வைகாசி, 1960.**

இன்றுகாலை கிறீற்றின் சிறியமலைகளைக் காண்கிறேன். சிறிதுதூரம் சென்றபின் பனிக்கட்டிகளால் மூடப்பட்டு வெய்யிலில் பளபளக்கும் பெரிய மலைகளும் தெரிகின்றன. நேற்றும் மத்தியானத்திலிருந்து 421மைல்கள் வந்துள்ளோம். கிறீற்நகரத்தைப் பார்க்கவே எவ்வளவு ஆனந்தமான எண்ணங்கள் எழுகின்றன. இங்கேதானே அர்ச். பாவுலு மோல்ற்றுதீவுக்குச் செல்லும் வழியில் தங்கினுர். சுமார் 900வருடங்களுக்குமுன்பு கோமர்என்னும் புகழ்பெற்ற கவிஞன் கிறீற்தேசத்தின் அழகிய பட்டினங்களைப்பற்றிப் பாடினுன். கிரேக்கர், வெனிஸ்தேசத்தார், துருக்கியர், எகிப்தியர்ஆகியோர் ஒருவர்பின் ஒருவராகக் கிறீற்தேசத்திலிருந்து வந்தார்கள். 1840-ல் துருக்கியர்அதைக் கைப்பற்றினுர்கள். ஆனுல், 1913—ல் அது கிறீஸ்தேசத்திற்குக் கொடுக்கப்பட்டது. 1941-ல் ஜேர்மனியால் இந்தத்தீவு சூழப்பட்டதும் எனதுநினைவிற்கு வந்தது.

இன்று முழுவதும் நாளை என்ன செய்வோமென்று விவாதித்தோம். நாளை மத்தியானம் போட்ஸ்செற் போய்ச் சேருவோம். எங்கள் நிகழ்ச்சிநிரலின்படி கெய்ரோவில்சிலமணிநேரம் செலவழித்துவிட்டு இரவு ஒருஹோட்டலில்தங்கி மறுநாட்காலை சுயெஸ்கால்வாயின் மறுமுனையில் நாம்மீண்டும் கப்பலில் ஏறவேண்டும். எங்களைக் கெய்ரோவில் வழிநடத்துவதற்கு இரண்டு ஏஜெண்டுகள் போட்டிபோடுகின்றன.

# எமது வாழ்க்கையில்....

(அமெரிக்காவில்நடந்த உண்மைச் சம்பவம்)

தம்முடைய கருமங்களில் கண்ணுங் கருத்துமாயிருந்த வங்கிக் காரியஸ்தர்கள் அம்மனிதன் உட்புகுந்ததை உணரவில்லை. அவன் வங்கியின் முதலவரைநோக்கி முன்னேறிக்கொண்டிருந்தான். முகத்தை மறைக்க முகமூடியணிந்திருந்தான். வலதுகையில் ஒரு கைத்துப்பாக்கி காணப்பட்டது. இடதுகை ஒரு மின்விசையைப் பற்றியிருந்தது. மேலங்கியினுள் டைனமைட் வெடிகுண்டு ஒளித்திருந்ததை எவரும் அறிந்திருக்க மாட்டார்கள். வங்கியிலிருந்த பணம் யாவும் தன் கைக்கு மாருவிட்டால் தன்னையும், வங்கியையும், வங்கியிலுள்ள ஏனையோரையும் சின்னுபின்னமாக்குவதே அவனுடைய எண்ணம். தன்னுடைய கையில் இருக்கும் மின்விசையை அழுத்தி மேலங்கியினுள் இருக்கும் வெடிகுண்டை வெடிக்கச்செய்து இதை அவன் சாதிக்கலாம். இதை அவன் முதல்வரிடம் வெளியிட்ட பொழுது அவரின் முகத்தில் மரண வேர்வை வியர்த்தது. இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அவனுக்குப் போக்குக் காட்டிக்கொண்டிருந்தார்.

விஷயம் பொலிஸாருக்கும் அப்பகுதிப் பிரதம துப்பறியும் அதிகாரி சார்ஜெண்ட் புளுஎவ் என்பவருக்கும் அறிவிக்கப்பட்டது. பொலிஸார் வங்கியை முற்றுகையிட்டனர். சார்ஜெண்ட் புளுஎவ் ஸ்தலத்தை அடைந்தபொழுது துப்பாக்கிவெடிச் சப்தமும் கண்ணுடி சிதறும் சப்தமும் கேட்டன. காரியஸ்தர் ஒருவர் தன்னிடமிருந்த கைத்துப்பாக்கியால் கொள்ளைக்காரனைச் சுட்ட பொழுது எழுந்த சப்தங்களே இவை. கொள்ளைக்காரன் இறக்கவில்லை. ஆனுல், அவன் எண்ணத்தை நிறைவேற்ற முடியாதவாறு காயப்படுத்தப்பட்டான்.

உடனே புளுஎவ் ஸ்தலத்துக்கு விரைந்து சென்றுர். மின்விசையை அகற்றிவிட்டு அதன் கம்பிகள் இட்டுச்சென்ற இடத்தை— மனிதனின் மேலங்கியின் உட்பகுதியை ஆராய்ந்தார். நிதானமாகவும் ஜாக்கிரதையாகவும் அங்கிருந்த டைனமைட் மாறுகளை வெளியேற்றினுர். மொத்தமாக முப்பத்தொன்பது மாறுகள் இருந்தன. அதன்மேல் பொலிஸார் அவனை மயக்க முற்றநிலையில் கைதுசெய்து சத்திர சிகிச்சை செய்யும்பொருட்டு அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

இச்சம்பவத்தின்பின் சார்ஜெண்ட் புளுஎவ் களைப்புற்றுக் காணப்பட்டார். வீட்டையடைந்ததும் தனது உல்லாசப் பொழுதுபோக்குக் கலையான சித்திரம் வரைதலில் ஈடுபட்டார். அவருடைய இளைப்பாற்றியைக் குலைப்பதுபோல் டெலிபோன் மணி கணகணத்தது. டெலிபோனை எடுத்த பொழுது வைத்திய நிலையத்திலிருந்து பொலிஸ் அதிகாரிஒருவர்பேசிக்கொண்டிருந்தார். காயமடைந்தவன் மயக்கம் தெளிந்து எழுந்தபொழுது தான் இன்னேரிடத்தில் நாசம் விளைவிக்கஎண்ணி ஒரு வெடிகுண்டை வைத்திருப்பதாயும் மாலை ஐந்துமணிக்கு அக்குண்டு வெடிக்கக்கூடியதாக அமைத்திருப்பதாகவும் தெரிவித்தான். ஆனுல் குண்டு வைக்கப்பட்டிருக்கும் இடத்தைக் கூறுமுன் அவன் மீண்டும் மயக்கம் அடைந்து பின் இறந்துவிட்டான். அவனைப்பின்னரும்பரிசோதனை செய்த போது அவனுடைய சட்டைப்பையுள் 362 என்ற எண்ணுள்ள ஓர் திறப்புக் கிடைத்தது. இது விஷயமாய் அமெரிக்கா முழுவதிலும் 362 என்ற எண் பற்றி வாஞெலியில் அஞ்சல் செய்தோம். அவ்வமயம் மத்திய புகையிரத நிலையத்திலிருந்து எமக்கு பதில் வந்தது எனபதுவாம்.

விஷயத்தைத் தெரிந்துகொண்ட புளுஎவ் உடனே மத்திய புகையிரத நிலையத்துக்கு விரைந்து சென்றுர். மாலை ஐந்து மணிக்குக் குண்டு வெடிக்கக்கூடியதாக அமைத்திருப்பதாக அவன் குறிப்பிட்ட குண்டு மணி 8-32 ஆகியும், வெடிக்காதது யாவருக்கும் புதிராகவிருந்தது. புகையிரத நிலையத்தை அடைந்த புளுஎவ் பிரயாணிகள் தங்கும் அறையைப் போய்ப் பார்வையிட்டார். பேழை ஒன்றினுள்ளிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு தோல்பை மேசை ஒன்றின்மேல் இருந்தது. அவர் அதன்ருகில் சென்று உற்றுக் கவனித்தார். 'டிக், டிக்' என்ற ஓசை கேட்டது. குறிப்பிட்ட நேரத்தில் குண்டை வெடிக்கச் செய்யும் நுட்பசாதனமாகிய ஓர் அலாரம் கடிகாரத்தின் ஓசைதான அது. மிக உருக்கமாக இறைவனை வேண்டிக் கொண்டார் புளுஎவ். விபரிக்க முடியாத பயம் மனதைக் கவ்வியது. கடவுளின் சித்தத்திற்குத் தம்மை அர்ப்பணித்துவிட்டுக் கடமையைத் தொடங்கினுர். தோல்பையைத் திறந்து சுற்றி வைக்கப்பட்டிருந்த உறைகளை வெளியேற்றினுர். முதலில் கடிகாரம் தென்பட்டது. இரண்டு மின்கம்பிகள் கடிகாரத்தின் கைகளில் பொருத்தப்பட்டுத் தோல்பையின் அடிப்பாகத்திற்குள் சென்று மறைந்து கொண்டிருந்தன. இறைவனை மீண்டும் ஒருமுறை வேண்டிக்கொண்டு கம்பிகளை வெளியே இழுத்து எடுத்தார் புளுஎவ். பின்னர் அடியில் இருந்த டைனமைட் மாறுகளையும் ஜாக்கிரதையாக வெளியேற்றிப் பிரித்துப் போட்டார். புகையிரத நிலையத்தைச் சூழ்ந்திருந்த அபாயம் நீங்கியது.

மாலை ஐந்துமணிக்கே குண்டு வெடிக்காததன் புதிர் கடிகாரத்தை ஆராய்ந்த பொழுது புலனுகியது. சில பஞ்சுப்பிரிகள் கடிகாரத்தின் கைகளில் சுற்றியிருந்தன. பையில் இருந்த பஞ்சுப்பிரிகளைக் கைகள் சுற்றும்போது தம்மேல் போர்த்திக்கொணடன. இவை ஒன்றின்மேல் ஒன்று வந்தபொழுதும் அவைகளுடைய தொடர்பைத் தடுத்தன. இதனுல் குண்டு வெடிக்காமல் நிலையம் அபாயத்திலிருந்து தப்பியது. மாலை ஐந்துமணியளவில் மூவாயிரம் பேர்கள் அந்நிலையத்திலிருந்தார்கள். இவர்களுக்கு எவ்வித சேதமும் இல்லாது காப்பாற்றியது பஞ்சுப்பிரிகள் தான்.

ஆண்டவனின் இரக்கமும் அவர் நம்மேல வைத்திருக்கும் அன்பும் இதில் புலனுகிறதல்லவா? மூவாயிரம்பேரில் எத்தனைபேர் வரப்பிரசாத அந்தஸ்தில் இருந்திருப்பார்கள்? எனவே, இச்சம்பவம் நாம் எந்நேரமும் வரப்பிரசாத அந்தஸ்தில் இருக்கவேண்டியதின் அவசியத்தைத் தெளிவுபடுத்துகிறதல்லவா? அதிகாரி புளுஎவ் அவர்களின் உத்தியோகம் எத்துணை அபாயகரமானது. அவர் எந்நேரமும் வரப்பிரசாத அநதஸ்தில் இருந்தாலன்றி, நித்திய பாக்கியத்தை அடைவது துர்லபமல்லவா? ஆகவே நாமும் எப்பொழுதும் எமது வாழ்க்கையில் வரப்பிரசாத அந்தஸ்தில் சீவிக்க முயல்வோமாக.

**"பத்மன்"**

## நன்றித்துதி

பரிசுத்த சதாசகாய மாதாவிடமும், கைநெகிழப் பட்டவர்களின் விசேஷ நம்பிக்கையும், பாதுகாவலருமான அர்ச். யூதாததேயுவிடமும், கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியாரிடமும் நான் கேட்ட மன்றுட்டு அனுகூலமானதை யிட்டு நேர்த்திப்பிரகாரம் இதைப் பிரசுரிக்கின்றேன்.

வாழைச்சேனை

ஒருபக்தன்

## கோட்டு விற்பனவு

**இல. M. B. 3454**

மானிப்பாய்
செல்லப்பா வைரமுத்து
—வழக்காளி

எதிராக

மானிப்பாய் நன்னிகணவதிபெண் அன்னம் தனித்தும், காலஞ்சென்ற நன்னிகணவதியின் ஆதனங்களின் தத்துவ உரிமைக்காரியாகவும்

—எதிராளி

யாழ்ப்பாணம், டிஸ்திறிக்கோட்டின் M. B. 3454-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1962-ம்ஆல் புரட்டாதிமீ 8-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 507-56சதம். ரூபா 448-50சதத்துக்கு 21-6-60 தொடக்கம் 6-10-60 வரை 8% வட்டியும், அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 171-48 சதமும், இதில் ரூபாய் 250|- கொடுபட்டிருக்கிறது. இக்கொமிஷன் மிகுதி முதலையும் வட்டியையும் [illegible]றவிடுவதற்காக வெளியிடப்பட்டிருக்கிறது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு—மானிப்பாய் கோயிற்பற்று மானிப்பாயிறை வீரதேவன் சீமாவும், மற்றும் பிரிவினைகளும். (பர-நில-இலா 3 குளி 0) பர-நில- இலா மூன்றும் 0குளியும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு—முதலிசரவணையின் ஆதனம், வடக்கும், மேற்கும் கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்துவினுரிமையாளரின் ஆதனம். தெற்கு—ஒழுங்கை இதடங்களும் தெற்கெல்லை காணியிலிருக்கும் கிணற்றில் $\frac{2}{5}$ பங்கும், அக்கிணற்றுக்கு வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்

**செ. விசாகரத்தினம்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

133, பருத்தித்[illegible]
நல்லூர், யாழ்ப்பாணம்.
18-8-62

**திருமதி இ. பாக்கியம் எலிசபேத் அவர்களின்**

# 1-ம்வருட மரணஞாபகம்

என்றும் எம்மால் மறக்கமுடியாத பிரியமனைவியும், நேசத்தாயாருமாகிய திருமதி இம்மனுவேல் பாக்கியம் எலிசபேத்அவர்கள் மரணமான முதல்வருட நினைவுதினம் 3-9-62இல் பூர்த்தியாகிறது. அன்றுகாலை ஆசனக்கோவிலில் ஓர் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக்கண்ணுறும் சகலரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக மன்றுடும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கணவன்:
B. இம்மனுவேல் (இளையதம்பி)
பிள்ளைகள்:
செபமாலை, அருள், தம்புதாசன்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். யூதாததேயுவிடம் மன்றுடிய தன்பயனுக நான் இரந்துகேட்ட வரம் கிடைக்கப்பெற்றேன். வாழ்க அவர்நாமம்.

ரி. பி. பி.

ஆனைக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளும் சமயபாடமும்

அடுத்துநிகழும் 1963-ம்ஆண்டு தை மாதமுதல் அரசாங்கபாடசாலைகளும், வித்தியாதிபரின் முகாமையிலுள்ள பாடசாலைகளுமாகிய சகலபாடசாலைகளும் சகலசமயபிள்ளைகளுக்கும் சமயபாடம் கற்பிக்கவேண்டும். சமயபாடம் கற்பிக்கத் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் இல்லாவிடில் தமக்கு மனுப்பண்ணுமாறு வித்தியாதிபர் பாடசாலைகளின் அதிபர்களைக் கேட்டிருக்கின்றார். ஜி. சி. ஈ. பரீட்சைக்குச் சமயபாடம் கட்டாயபாடமாயிருப்பதால் சகல பாடசாலைகளிலும் உடனடியாகத்தானே சமயபாடம்கற்பிக்கத் தொடங்க வேண்டுமென்று அவர் உத்தரவிட்டிருக்கின்றார். கத்தோலிக்க மாணவருக்குச் சமயபாடம்படிப்பிக்க அதிமேற்றிராணியாரால் தகுதியானவர்களென்று தாரதரப்பத்திரம் வழங்கப்பெற்ற ஆசிரியர்கள்மட்டுமே அமர்த்தப்பட வேண்டுமென்ற உடன்பாடு கொழும்பு அதிமேற்றிராணியாருக்கும், வித்தியாதிபருக்குமிடையே ஏற்பட்டுள்ளது. சமயபாடம் கற்பிப்பதிலே பிறசமய கோட்பாடுகளையும், அனுசாரங்களையும் ஒப்பிட்டுக் கற்பிக்கப்பட மாட்டாதென உறுதிவாக்கு அளிக்க வேண்டுமென்று பாடசாலைகளின் அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள். மற்றோர் சமயபாடம் தனதுபிள்ளைக்குப் படிப்பிக்கப்பட வேண்டுமென்று அப்பிள்ளையின் தகப்பனார் குறிப்பிட்டு எழுதினாலன்றி மற்றப்படி மாணவருக்கு அவர்கள் தகப்பனாரின் சமயபாடமே கற்பிக்கப்படவேண்டும்.

# கவர்னர்-ஜெனறலின் கண்தானம்

கவர்னர்-ஜெனறல் சென்றவெள்ளிக்கிழமை கொழும்பிலே கண்தானஇயக்கத்தை ஆரம்பித்து வைத்தபோது, தாம் இறந்தபின் தமதுகண்களைத் தானஞ்செய்யச் சம்மதம்தெரிவிக்கும் பத்திரம்ஒன்றில் கைச்சாத்திடலாயினர். அவ்வாறே தனதுகண்களையும் தானஞ்செய்யச் சம்மதித்துள்ள தம்முடைய பாரியாருடையவும் கையெழுத்தைப் பெறுவதற்கென்று அவர் மற்றொருபத்திரத்தைப் பெற்றுக்கொண்டார்.

## பங்கீட்டரிசி வெட்டு

வரவு-செலவுத்திட்டத்திலே பெருங்கண்டனத்துக் கேதுவாயிருந்த பங்கீட்டரிசிவெட்டைக் கைவிடுவதென மந்திரிசபை தீர்மானித்துள்ளது. சனப்பிரதிநிதிகள்சபையிலே அரசாங்க கட்சியையும், எதிர்க்கட்சியையும் சேர்ந்தவர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்கவே பங்கீட்டரிசிவெட்டு கைவிடப்படலாயிற்று.

# தமிழருக்கும் நியாயம்வழங்கப்படல் வேண்டும்

நிதிமந்திரியின் பாராளுமன்ற காரியதரிசியாய் இருந்துவந்த திரு. ஜோர்ஜ் இராசபக்சே தனதுபதவியை இராசிநாமாச்செய்து பிரதமருக்குச் சென்ற வியாழக்கிழமை எழுதியகடிதத்திலே, தேசிய ஐக்கியமின்றித் தேசியஅபிவிருத்தி ஏற்படமுடியாதென அறிவித்துத் தமிழர்களுக்கும் நியாயம் வழங்கப்படவேண்டியது அவசியமென வற்புறுத்தியிருக்கின்றார்.

## புதிய நிதிமந்திரி

புதிய நிதிமந்திரியாகத் திரு. சி. பி. டி சில்வாவும், அவரின் பாராளுமன்றக் காரியதரிசியாகத் திரு. ஆர். எஸ். வி. போலியரும் தெரியப்பெற்றுச் சென்ற செவ்வாய்க்கிழமைகாலை இராணிமாளிகையில் விசுவாசப்பிரமாணம் செய்துகொண்டார்கள். திரு. சி. பி. டிசில்வா நிதிமந்திரியாய் இருப்பதோடு, காணி, விவசாய, நீர்ப்பாசன, மராமத்துமந்திரியாகவும் தொடர்ந்து கடமையாற்றுவார்.

## நிதிமந்திரியின் இராசிநாமா

பிரதமர்சிறிமா பண்டாரநாயக்காவின் மந்திரிசபையிலே நிதிமந்திரியாய் இருந்துவந்தவரான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தனதுமந்திரி பதவியைச் சென்றசனிக்கிழமை இராசிநாமாச் செய்துவிடலாயினர். தனது மந்திரிபதவியை இராசிநாமாச்செய்துள்ள இவர் தற்போது பாதுகாப்பு-வெளிநாட்டு விவகார அமைச்சின் பாராளுமன்றகாரியதரிசியாகமட்டுமே இருந்துவருகிறார். பங்கீட்டு அரிசிவெட்டுக்குப்பதிலாக வேறேதாவது நடவடிக்கையெடுக்கக் காலதாமதமாகுமென்று எண்ணியே தனதுமந்திரி பதவியை இராசிநாமாச்செய்ததாக அவர்தெரிவித்திருக்கிறார்.

# நிரந்தர இராணுவ முகாம்

கள்ளக் குடியேற்றத்தைத் தடைசெய்யுமுகமாக வடபகுதியிலே பலாலியில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுவரும் இராணுவமுகாம் கட்டடவேலைகள் இந்தப்புரட்டாசியிலே முடிவடைந்ததும் முன்னூறு இராணுவவீரர்கள் வரை அதிலிருந்து கடமையாற்றுவார்கள். சென்றயுத்தகாலத்திலே இலங்கை விமானப்படைக்குச் சொந்தமாயிருந்து பின்னர் தேடுவாரற்றுச் சிதைந்து போயிருந்த கட்டடங்களையே அரசாங்கம் சுமார் 1,30,000 ரூபாசெலவில் நிரந்தாஇராணுவமுகாமாக மாற்றியமைத்து வருகின்றது. இந்தநிரந்தரமுகாம் அமைக்கப்பட்டதும் வடபகுதியிலே ஆங்காங்குள்ள தற்காலிக இராணுவ முகாங்களெல்லாம் அகற்றப்பட்டுவிடும்.

## சிங்கள தேர்ச்சிப் பரீட்சை

புரட்டாசிமாதம்1-ந்தேதி நடைபெறவிருந்த சிங்களதேர்ச்சிப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 1,620 அரசாங்க ஊழியர்கள் விண்ணப்பித்திருந்ததாகத் தெரியவருகிறது. இங்கே பதினைந்துநிலையங்களில் இப்பரீட்சை நடைபெற ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. சென்றவருடம் இப்பரீட்சைக்குச் சுமார்550பேர் விண்ணப்பித்திருந்தும் குறைந்ததொகையினரே அதற்குத்தோற்றியிருந்தனர்.

## இலங்கையின் சனத்தொகை

நிகழும் 1962-ம்ஆண்டு முடிவதற்குள் இலங்கையின் சனத்தொகை 1கோடியே 6இலட்சமாகவும், 1963-ம் ஆண்டிலே இத்தொகை 1கோடியே 10இலட்சமாகவும் அதிகரித்துவிடுமென்று அரசாங்க புள்ளிவிபர அதிகாரிகள் தற்போது கணக்கிட்டுள்ளார்கள். புள்ளிவிபரப்பகுதி அடுத்தவருடமத்தியிலே குடிசனமதிப்பு எடுக்கவிருக்கிறது.

# வரவு-செலவுத் திட்டம்

சனப்பிரதிநிதிகள்சபையிலே சென்ற சனிக்கிழமை அதிகாலை 4-45மணிக்கு வரவு-செலவுத்திட்டமசோதா வாக்குக்குவிடப்பட்டு அதற்குச்சாதகமாக 83பேரும், பாதகமாக 70பேரும் வாக்களித்தமையால் அது 13அதிகப்படியான வாக்குகளைப்பெற்று இரண்டாம் முறையாக நிறைவேறியது. பங்கீட்டரிசிவெட்டு கைவிடப்பட்டதென்று நிதிமந்திரி கடைசிநேரத்தில் அறிவித்ததிலிருந்து மசோதாவை எதிர்த்து நின்ற அரசாங்கக்கட்சியினரில் ஒருவர் நீங்கலாக ஏனையோரெல்லாம் அதற்குச்சாதகமாக வாக்களித்தார்கள்.

## உப்பு இறக்குமதி

இலங்கையிலே இவ்வருடத் தேவைக்கென்று இதுவரை பிறநாடுகளிலிருந்து 39,000 தொன்உப்பு இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது. இன்னும் 8,000 தொன் வந்துகொண்டிருக்கிறது. எகிப்து, பாகிஸ்தான், தூத்துக்குடியிலிருந்தே இந்தஉப்பு இறக்குமதிசெய்யப்படுகிறது. ஆனால், மறுவருடத்திலே இலங்கையின் சுயதேவையைப் பூர்த்திசெய்யக் கூடியதாய் உப்புக்கூட்டுஸ்தாபனமும், உப்புப்பகுதியும் முயற்சித்துவருவதால் அடுத்தவருடம் உப்பு இறக்குமதிசெய்ய வேண்டிவராதென நம்பப்படுகிறது.

## பச்சைஅரிசி மாத்திரம்

அரசாங்கம் வாங்கிவருகின்றநெல் அடுத்தவருடமுதல் புழுங்கலஅரிசியாக் குத்தப்படமாட்டாது. உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு நெல்குத்திக்கொடுக்கக் கொந்திறாத்தெடுக்கும் அரிசிகுத்தும்ஆலைகளின் சொந்தக்காரர்கள் வருங்காலத்தில் பச்சையரிசியாகமட்டுமே நெல்லைக்குத்திக்கொடுக்கவேண்டும். நெல்லை அரிசியாகக்குத்த ஏற்படும் செலவைக் காட்டிலும் பச்சைஅரிசியாகக் குத்த ஏற்படுஞ்செலவு மிகக்குறைவாய் இருப்பதாலேயே இவ்வாறு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

# வருடாந்த ஞானவொடுக்கம்

ஊர்காவற்றுறை, கடைவீதியில் கோவில் கொண்டிருக்கும் அர்ச். சூசையப்பரின் வருடாந்த திருநாளைப் பூசிதமாகக் கொண்டாட வருடாந்த ஞானவொடுக்கம் உதவியாயிற்று. 21-8-62 முதல் நவநாட்தினங்களில் காலையிலும், மாலையிலும் ஞானவொடுக்கப் போதகம் நடந்தேறியது. காலை 10-30 மணிக்குச் சிறுவர் சிறுமியர் வாலிபருக்கெனப் பிரசங்கங்கள் இடம்பெற்றன. ஞானவொடுக்கப் போதகஞ் செய்தவர், பங்களூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. ஜோசவ் ராஜகாரியர் சுவாமிகள் ஆவர்.

சுவாமியவர்கள் தமது பிரசங்கத்தில் வாலிபருக்கும், கன்னியருக்கும், குடும்பத்தலைவருக்கும், தலைவிமாருக்கும், குடும்பத்தின் அங்கத்தினர் இன்னோரன்ன சகலருக்கும் அவசியமான புத்திமதிகளை — அதாவது, திவ்விய பூசையின் மகத்துவம், நற்கருணையின் பலம், இல்லறத்தார் கடமை, கற்பின் மகிமை, வெறுப்பான, ஈனமான குடும்பக்கட்டுப்பாட்டின் கொடுமை, தேவ அழைத்தல், பாவத்தின் பயங்கரக்கேடு என்னும் பல அரிய விடயங்களைப்பற்றி மிக அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினார். கடைசித்தினமான சனிவாரம் 25-8-62இல் மாலை ஞானஸ்நான வாக்குத்தத்தங்கள் புதுப்பிக்கப்பட்டன. எரியும் திரிகளை ஏந்திக் காவலூர் மீசாமின் கத்தோலிக்கர் பெருந்தொகையாக ஞானஸ்நான வாக்குத்தத்தங்களைப் புதுப்பித்தமை அருட்சிக்குரியதாயிருந்தது. அஃதொன்றே ஞானவொடுக்கம் எவ்வளவு வெற்றியும் பலனுமளித்ததென்பதற்கு ஒரு மாபெரும் எடுத்துக்காட்டாகும். மறுநாள்காலை திருநாட்பூசையுடனும், மாலை புனிதவளனாரின் திருச்சொரூப சுற்றுப்பிரகாரம், திவ்வியநற்கருணை ஆசீவா்ாதத்துடனும் ஞானவொடுக்கம் நிறைவேறியது.

—நிருபர்.

## வத்திக்கான் பொதுச்சங்கம் சித்தி...

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

பொதுச்சங்கம் ஏன் கூட்டப்படுகிறது? நாம் ஒன்றித்திருக்கும் இக்கிறிஸ்துவின் ஞானச்சரீரத்தின் பூர்வாங்க நன்மைகளனைத்தையும்பெற்று ஒருமுழுமையான சீவியத்தைச் சீவிப்பதே இதன் முதல் நோக்கம். மாபெரும் மாற்றங்கள் நடந்துகொண்டிருக்கும் இன்றைய உலகில் திருச்சபையும் அதன் அங்கத்தவர்களாகிய நாமும் சீவிக்கிறோம். நம்முடைய சீவியம் கிறிஸ்துவிடமிருந்தே வருகிறது. ஆகையால் திருச்சபை இச்சங்கத்தை நடாத்துவது நம் ஒவ்வொருவருடைய நன்மையையும் கருதியே என்பதை மனதில் பதித்துக்கொள்ளுதல் வேண்டும்.

மேற்கூறியவற்றை ஊன்றிச் சிந்தித்தால் நமது பரிசுத்ததந்தை எதற்காகச் செபமும் பரித்தியாகமும் அவசியம்எனக் கூறுகிறார் என்பது தெளிவாகும். இறுதியாக ஒரு விடயம். பல நூற்றுண்டுகளாக நம் திருச்சபையில் பலர் தம் உயிரையே கிறிஸ்துவுக்காகப் பலிகொடுத்திருக்கிறார்கள். உயிரைக்கொடுப்பது அதிமேலான பரித்தியாகம் என்றாலும் நாம் ஒவ்வொருவரும் செய்யக்கூடியவை பலஉண்டு. சிறு இன்பங்களைக் கைவிட்டு, நம்மை ஒறுத்துத் தினமும் செபித்து இறைவனை வேண்டுவோம். இவ்விதம் செய்தால் நம்திருச்சபை இறைவனிடமிருந்து மேலும் பலம்பெற்று ஓங்கிவளர நாம் உதவியவர்களாவோம்.

## பொலிவியா

இங்குள்ள கோர்ப்பா என்னும் மலையடிவாரக் கிராமத்தவர்கள் தம்கிராமத்தில் கிறிஸ்துவின் பாடசாலையை நிறுவுவதற்காக மொத்தம் 14000 நாட்கள் பெறுமதியான வேலையைச் செய்து முடித்திருக்கிறார்கள். பொலிவியாவில் கிறிஸ்துவின் பாடசாலை எனப்படும் கத்தோலிக்க பாடசாலைகள் இதுவரை 200-க்குமதிகமாகத் தொழிற்பட்டு வருகின்றன.

## குழந்தை தெரேசு...

( 1-ம் பக்கம் பார்க்க )

கொண்டிருப்பாள். அக்குழந்தையின் வதனம் மிகவும் பிரகாசமாக ஜொலித்துக்கொண்டிருக்கும். அவளைப்பார்த்த எவரும் அவள் ஒரு விவேகியென்பதை மட்டிட்டுக்கொள்வர்எனப் பின்னர் இம்மாது கூறியிருக்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### புரட்டாசி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ச. | மரியாயின் சனி | | [வெ] |
| 2 | ஞா. | இஸ். ஆக. பின் 12-ம்ஞாயிறு | (வி. ம.) | [ப] |
| 3 | தி. | அர்ச். பத்தாம்பத்திநாதர் | | [வெ] |
| 4 | செ. | காலதினம் | | [ப] |
| 5 | பு. | அர்ச். யுஸ்தினியானி லவுரேஞ்சியார் | | [வெ] |
| 6 | வி. | காலதினம் | | [ப] |
| 7 | வெ. | காலதினம் | | [ப] |


# சத்தியவேத பாதுகாவலன்

1962-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 1-ந் திகதி


## கண்ணீரும் கதைசொல்லும் மதிற்சுவர்

ஆலயமணி திவ்விய பூசைக்கு மக்களை அழைக்கிறது. மணியோசைகேட்ட விசுவாசிகள் ஆலயம்நோக்கித் தீவிரித்துச் செல்கின்றனர். அதோ சில விசுவாசிகள். மனுமகனின் இரத்தம்சிந்தாப்பலியில் பங்குபெற அவர்களும் விரும்புகின்றனர். குறுக்கே, உயர்ந்து வளர்ந்த மதிற்சுவர். சுவரைப்பார்த்துப் பார்த்து விழிகள் நீரைப் பெருக்குகின்றன.

ஒரு பச்சிளம் குழவிக்கு ஞானமுழுக்காட்டும் வைபவம். ஆலயச் சடங்கின்பின் தம்பதிகள் அவசரமாக ஓடிவருகின்றனர் அந்தச் சுவரண்டை. கூடுமானவரை உயரமாக ஏறிநின்று தங்கள் புதிய செல்வனைச் சுவருக்கெதிராகத் தூக்கிக் காட்டுகின்றனர். சுவருக்கு அப்பால் அந்த அன்புத்தம்பதிகளின் உறவினர்கள். கைச்சயிக்கினையால் தங்கள் மகிழ்ச்சிகளைத் தெரிவிக்கின்றனர். அந்தோ பரிதாபம்.

புதிய தம்பதிகள், பிறந்த தினத்தைக் கொண்டாடுவோர், மற்றும் தங்கள் வாழ்வில் பல மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகளில் பங்குகொள்வோர், தம் உறவினர்களுடன் அவற்றை அனுபவிக்க முடியாதவாறு தடுக்கிறது அந்த மதிற்சுவர். இந்த நாகரிகயுகத்தில் இப்படியொரு அவமானச்சின்னம் பெர்லின் நகரிலே.

இரண்டாவது உலகயுத்தம் முடிந்தது. தங்கள் நாடுகளில் போரின் விளைவு செய்த அழிவுகளைக் கண்டோர் ஆத்திரமடைந்தனர். படாதபாடுபடுத்திய ஜேர்மனியைப்பழிவாங்க விரும்பினர். மீண்டும் அது தலைதூக்காதவாறு செய்ய எண்ணினர். அதன்மூலம் உலகில் நிரந்தரசமாதானம் நிலவும் என்பது அவர்கள் கருத்து.

எனவே, வல்லரசுகள் நான்கு, ஜேர்மனியைக் கூறுபோட்டன. தலைநகரான பேர்லினும் இரண்டாகப்பிரிந்தது. வல்லரசுகள் அங்கே இராணுவமுகாம் அமைத்தன. தங்கள் பகுதிகளில் தங்கள் கொள்கைகளை வித்திட்டன.

பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்று உலகின் சமாதானத்துக்குத் தலையிடி அளித்தது ஒரு ஜேர்மனி. இன்று உலகப் பெரும்போர் மூளுவதற்கு உறுதுணையாகவிருப்பது கூறுபோடப்பட்ட இரு ஜேர்மனிகள். ஒன்று ஜனநாயகபண்பாட்டில் வளர்ந்தது. மற்றது பொதுவுடைமைத் தத்துவங்களால் பின்னப்பட்டது. பிரிக்கப்பட்ட ஜேர்மனிகளிடையே ஒரு பிரச்சினை.

மேற்கு ஜேர்மனியில் பொருளாதாரம்நன்கு செழிப்புற்றது. அங்கே மக்கள் மகிழ்ச்சியுடன் சுதந்திரமாக வாழ்க்கை நடாத்துகின்றனர். கிழக்கு ஜேர்மனி இராணுவபலத்தில் முன்னேறிவிட்டது. ஆயின், சுதந்திரமான வாழ்வு இல்லை. பின்தங்கிய பொருளாதாரத்தால் பசிபட்டினிக்கும் குறைவில்லை. எனவே. வளம்தேடிய மக்கள் மேற்கு ஜேர்மனிக்குச் செல்லத்தலைப்பட்டனர். அதற்கு ஒரே வழி பெர்லின் நகரம்தான்.

கிழக்கு ஜேர்மனியால் சூழப்பட்டது பெர்லின் நகர். அது இருகூருக்கப்பட்டபோது மேற்கு பெர்லினிலிருந்து மேற்கு ஜேர்மனிக்கு விமானமூலம் கிழக்கு ஜேர்மனியின் மேலாகப் பறந்துசெல்ல விசேடவிதியொன்று அமைக்கப்பட்டது. கிழக்கு பெர்லினிலிருந்து தினசரி திரளானோர் மேற்கு பெர்லினுக்கு தொழில்காரணமாக வருவர். அவர்கள் மேற்கு பெர்லின் நகரில் தங்கி அங்கிருந்து விமானமூலம் மேற்கு ஜேர்மனிக்குத் தப்பியோடுவர்.

வந்தாரனைவரையும் வரவேற்றது மேற்கு ஜேர்மனி. உடன் பிறந்தோரல்லவா அவர்கள். தினசரிதிரளானோர் நாட்டிலிருந்து வெளியேறுவதை உன்னினர் கிழக்கு ஜேர்மனியின் ஆட்சியாளர்கள். தடுக்கப்பல வழிகளையும் கையாண்டனர். சித்திக்கவில்லை. எனவே பிரிவினையைக்காட்டும் எல்லையில் பலமைல் தூரத்துக்கு மதிற்சுவரும் அதன்மேல் கம்பிவலையும் அமைத்தனர். அந்தச்சுவர் பெர்லினை மட்டும் பிரிக்கவில்லை. அன்புத்தம்பதிகள், ஆருயிர் நண்பர்கள், இன்பமான குடும்பத்தினர், இரத்த உறவுபடைத்தவர்கள் அனைவரையும் பிரித்துவிட்டது.

சுவரின் இருபக்கமும் காவல்வீரர்கள். அவர்கட்கூடாகத் தப்பியோடுவோர் பலர். காவல்வீரரின் துப்பாக்கிகட்கு இலக்காகி இரத்த வெள்ளத்தில் கிடப்போர் சிலர். இச்சுவர்மூலம் இரு ஜேர்மனிகட்குமிடையே பலபிரச்சினைகள். அதைத்தொடர்ந்து வல்லரசுகட்கிடையே மோதல்கள். இந்நிலையில் மதிற்சுவர் தனது ஓராண்டு பிறந்ததினத்தைக் கொண்டாடுகிறது.

விண்ணிலே விந்தைமிகு விளையாட்டுகள் செய்யும் வல்லரசுகள் சற்றுநேரமாவது மண்ணுலகுக்குத்திரும்பி ஜேர்மன்மக்களின் பிரச்சினையை அமைதியாகத் தீர்க்கமாட்டார்களா? நாகரிகத்தின் அவமானச்சின்னமாக, மனிதஉரிமைக்குப்பங்கமாக, பிரிக்கப்பட்ட உள்ளங்களின் எதிரியாகவிளங்கும் மதிற்சுவர் தகர்க்கப்பட்டு ஜேர்மனி ஐக்கியமடைவது எப்போது? அன்றுதான் உலகில் மீண்டும் சமாதானம் ஏற்படும் என நம்பலாம்.

## குருப்பட்டாபிஷேகம்

யாழ்ப்பாணம், பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக் கோவிலிலே நிகழும் புரட்டாசிமாதம் 1-ந்திகதி சனிக்கிழமை காலை7மணிக்கு மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்களால் **வண. ஜி. ஈ. மேரி யோசெவ், வண. ஹிலறி ஜெபநேசன், வண. யோசெவ்** எனும் பிறதர்மார் மூவரும் குருத்துவ திருஅபிஷேகஞ் செய்யப்பெறுவார்கள்.

இந்த அபிஷேக திருவைபவத்தின்போது உறவினரும், அன்பர்களும், அபிமானிகளும் திரளாகச் சமுகமளித்துப் புதிய குரவர்களுக்காக மன்றாடிக்கொள்ளுமாறு பரிவாகக் கேட்கப்படுகின்றார்கள்.

# ஈழநாடே,

## உன் புதல்வர்களே உனக்கு இரட்சணியம் கொண்டுவர வேண்டும்.

"அறுப்பு மிகுதியாயிருக்கின்றது, வேலையாட்களோ கொஞ்சம்பேர்" (லூக். 10, 2) என்று நமது ஆண்டவர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் கூறியது இன்று முற்றிலும் உண்மை. ஒரு தேசத்தின் சனக்கணக்கையும் அவர்களிடையே அருஞ்சேவைபுரியும் குருமாரின் எண்ணிக்கையையும் சற்று ஆராய்ந்துபார்த்தால் மேற்கூறிய உண்மை விளங்கும். குருமார் இல்லாததின் காரணத்தால் உலகத்தின் பல பாகங்களிலும் ஆத்துமங்கள் பசாசின் மாயவலைக்குள் சிக்கிக்கிடக்கின்றன. அவர்களை இவ்வலையிலிருந்து விடுவிப்பதற்குக் குருமார் அவசரம் தேவை என்று கூவிஅழைக்கும் மேற்றிராசனங்கள் எத்தனையோ இருக்கின்றன. சிதறிப்போன ஆடுகளை ஒன்றுசேர்ப்பதற்கு ஞானமேய்ப்பனின்றி வாடிவதங்கும் தேசங்கள் எத்தனை.

கிறிஸ்து விண்ணிலிருந்து தன்னை வெறுமையாக்கினர். எளியவாழ்வு வாழ்ந்தார். இவ்வுலகிலே இன்னல்களுக்கு இரையானார். சதைகிழிய அடிபட்டு உள்ளமும் உடலும் நொருக்கப்பட்டு மனிதர்மேல் கொண்ட அன்பின் நிமித்தம் தம்உயிரை அவர்களுக்காக மாய்த்தார். ஒருதுளி இரத்தம் முதலாய்த் தனக்கென்று வையாமல் எல்லாவற்றையும் மனித இரட்சணியத்துக்காகச் சிந்தினார் இந்த இரட்சணிய வேலையைத் தொடர்ந்து நடத்துவதற்குக் குருமார்தேவை. தென்அமெரிக்காவை உற்றுநோக்குங்கள். என்னபரிதாபம்! அங்குள்ள தேசங்களெல்லாம் பொதுவுடைமை ஆதிக்கத்துக்கு உட்படுகின்றன. ஏனெனில் அந்தத்தேசத்திலுள்ள மக்களின் ஆத்தும நன்மையைப் பார்ப்பதற்குக் குருமார் இல்லாக்குறையால்தான். ஏன், அவ்வளவுதூரம் போகவேண்டும். நம் தாய்நாடாகிய இலங்கையை ஏறெடுத்துப் பாருங்கள். இங்குவாழும ஒன்பதுகோடி மக்களுள் கத்தோலிக்கர் எத்தனைபேர்? இரட்சணியவேலை செய்யும் துறவிகள் எத்தனைபேர்? ஆம் உண்மைப் பரமனை அறியாது உறங்கும் மாந்தர்க்குக் கணக்கில்லை. உண்மை வெளிச்சத்தைக் கண்டறியாது மின்னிருட்டு நிழலில் நடந்துசெல்பவர்கள் அநேகம்பேர். இவர்களுக்குக் கிறிஸ்துவின்அன்பைப் பகிர்ந்து கொடுத்து அவர்களைக் கிறிஸ்துவின்பால இட்டுச்செல்லும்வழியை அவர்களுக்கு உரைப்பதற்கு எத்தனைகுருமார் இருக்கின்றார்கள்? அன்று பலஸ்தீனநாடுமுழுவதும் சுற்றித்திரிந்துமக்களுக்கு அன்புவழியைக்காட்டின நம்யேசுபெருமான் சனக்கும்பலைக்கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல் அலைக்கழிக்கப்பட்டுக் கிடக்கிறார்களென்று அவர்கள்மேல் இரங்கினர். இந்தக் கருணைக்கடலாகிய நமது ஆண்டவர் இன்று இலங்கையின் நிலைமையைக்கண்டு, என்? உலகத்தின் திரளான மக்களின்மேல் மனமிரங்கினர் என்று நாம் சொல்லத் தேவையில்லை. கிறிஸ்துமரித்து உயிர்த்துஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாகின்றன. உலகம் முழுவதும் கிறிஸ்துவ உலகமாகிவிட்டதா? நம்நாட்டிலே கிறிஸ்துவின் அரசை நாட்டுவதற்குக் குருமார் வேணடாமா? குருமார் எங்கே? நாம வெளிநாட்டு மக்களின் தாராளத்தையும், தியாகத்தையும் நம்பி இருக்கலாமா? அதுவுமல்லாமல் வெளிநாட்டுக்குருமார் நம் நாட்டுக்கு வருவதற்குத் தடைசெய்யப்பட்டிருக்கிறபடியினல் நாம்எங்கிருந்து குருமாரின் தேவையை நிவிர்த்திசெய்யவேண்டும்? நம் நாட்டில் இருந்தே இந்தக் குருமாரை நாம உதவவேண்டும்.

"நீங்கள் உலகமெங்கும்போய் எல்லாச் சாதிசனங்களுக்கும பிரசங்கியுங்கள்" என்ற யேசுவின கட்டளையை நிறைவேற்றக் குருமார் பலர் வேண்டுமென்பது வெள்ளிடைமலை. ஆம், விளைச்சலோ உலகமெங்கும் பரந்து நிறைந்திருக்கின்றது. ஆனால், அவற்றைச் சேகரிக்க ஒரு சிலரால் கூடுமோ? ஆட்கள் அதிகம். ஆனால், அவர்களுக்குப் போதுமான வேலை இல்லை என்று குறை சொல்வதற்குக் கிஞ்சித்தேனும் இடமில்லை. நம இலங்கைக்கு ஐயாயிரம் (5000) குருமாரை அனுப்பினும் அவர்களுக்கு அபரிமிதமான வேலை இருக்கின்றது. இது மெய்; ஏனெனில, நூற்றுக்குத் தொண்ணூற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார அர்ச்சியசிட்டவர்



## “நற்கருணைப் பாப்பரசர்” அர்ச்சியசிஷ்ட 10-ம் பத்திநாதர்

தேதி—புரட்டாதி 3

### இவரது சீவியத்தின் பருவங்கள்

சிறுபிள்ளைக்காலம், குருமடப் படிப்புக்காலம், குருத்தொண்டுக்காலம், மாந்துவாநகர மேற்றிராணித்துவகாலம், வெனிஸ்நகரபிதாப்பிதாப்பதவிக்காலம், பாப்பரசர்பதவிக்காலமென 6 பருவங்களாக அர்ச்சியசிஷ்ட 10-ம் பத்திநாதருடைய சீவியம் வகுக்கப்படலாம். ஒவ்வொருபருவத்திலும இருந்த ஒழுக்கச் சிறப்புகள் அவ்வப்பருவத்துக்கே இவரை ஒரு மேல்வரிச் சட்டமாக விளக்கிவிட்டன.

### சிறுபிள்ளை “பெப்பி” சார்த்தோ

இத்தாலியில் இரியெஸ் என்னும் சிறு கிராமத்தில் 10-ம் பத்திநாதர் 1835-ம் ஆண்டு ஆனிமாதம் 2-ந்திகதி கியோவானி சார்த்தோ என்பவருக்குப் புத்திரனாய்ப் பிறந்தார். இவரது தாயார் பெயர் மார்கரீத்தா. ஞானஸ்நானத்தில் இடப்பட்ட இருபெயர்கள் சூசை மெல்கியோர் என்பன. தம்பி ஒருவர், சகோதரிகள் அறுவர். தகப்பனார் அக்கிராம அஞ்சற்காரன் வேலைபார்த்துப் பெற்ற சிறு சம்பளத்துடன் குடும்பத்தைத் தாபரிக்கவேண்டியவரானார். வீட்டில் பல நேரங்களில் பட்டினி. அணிவதற்குப் போதிய உடுப்புகள் இல்லை. எல்லாக் கஷ்டங்களையும் சந்தோஷத்துடன் ஏற்றுத் தேவசித்தம் அதுவெனக் கொண்டு பயபக்தியாய் நடந்துவந்தனர். மூத்த மகன் சூசையை “பெப்பி” என்னும் செல்லப்பெயரால் கூப்பிடுவார்கள். அவரே சிறுபராயத்திலிருந்து அக்குடும்ப திலகமாக விளங்கினார். விவேக புத்தியும், வாய்ச்சாதுரியமும், மனமகிழ்ச்சியும், ஆழ்ந்த தேவசிநேகமும் உடையவர். வீட்டில் சகோதரனையும், சகோதரிகளையும் நடப்பித்துக் கொள்ளுவார். வேலைகள் ஒழிந்தால் அவரைக் கிராமக் குருவானவருடனேயே கண்டுகொள்ளலாம். “சின்னப்பங்குச் சுவாமியார்” எனும் பெயரும் பெற்றுவிட்டார். கிராமப்படிப்பு முடிந்தது. “பெப்பி” குருவானவராகவே தகுதியுடையவர் என உணர்ந்த அப்பங்குச் சுவாமியார் அவருக்குப் பணஉதவி செய்து பதுவாநகரிலுள்ள குருமடத்தில் அவரைச் சேர்த்து வைத்தார். ஏழைப்பெற்றோரும் தமது புத்திர இரத்தினத்தைச் சந்தோஷமாகத் தேவனுக்குக் கையளித்தனர்.

### குருமடப் படிப்பு

குருமடத்தில் சேர்ந்ததுமுதல் “பெப்பி” பெயர்பெற்றுவிட்டார். அவரது விவேகத்தையும், இனிமையான பேச்சையும், என்றும் மலர்ந்த முகத்தையும வியந்து பேசிக்கொண்டனர். குருமடத்தில் உள்ளவர்கள் யாவருக்கும எவற்றிலும் முன்மாதிரிகையாக இருந்தார். எவருக்கும் அருமையானவரானார். குருமடத்தில் சேர்ந்த ஆரம்ப காலங்களில் தகப்பனார் மரணித்தார். தன் கடமை யாதெனத் தெரியாது கலங்கிநின்ற “பெப்பி” மகனுக்கு “மகனே, நீ எங்களைப்பற்றிக் கவலைகொள்ள வேண்டாம் தேவன் எம்மை நடப்பிப்பார்” எனத் தாயார் கூறியது பெரும் மன ஆறுதலை அளித்தது ஊக்கமாகக் படித்து, அதிகாரிகளுக்குச் சிறப்பாக அமைந்து, தேவநேசத்தில் வளர்ந்து 1858-ம் ஆண்டு குருவாகினார். குடும்பத்தவரின் மகிழ்ச்சிக்கும் அளவுண்டோ?

### குருத்தொண்டு

குருத்தொண்டு அவரைப் பல இடங்களுக்கும் இட்டுச் சென்றது. எங்கு சென்றாலும் ஆத்துமாக்களை இரட்சிக்கும் வாஞ்சை அவரைப் பல அரிய தியாகங்களுக்கும் தூண்டி நின்றது. “எம்கடன் பணிசெய்து கிடப்பதே” என்பதே அவர் குறிக்கோள். ஞானோபதேசம் கற்பிப்பதும், திவ்விய நன்மைக்குப் பிள்ளைகளை ஆயத்தம் செய்வதும், பிழைபோனவர்களைத் திருத்துவதுமே அவரது விசேஷ விருப்பங்கள். ஏழைகளின் நண்பன், சிறு பிள்ளைகளின் தோழன்; வயதுசென்றவர்களின் ஆறுதல். இவர் முதன்முதலாக நாட்டுப்புற தொம்போலாப் பகுதியின் உதவிப் பங்குக்குருவாகவும், அதன்பின் சாள்சானுநகரின் கட்டளைக்குருவாகவும், பின்னர் திரெவிசா மேற்றிராசன குருமடத்தின் ஆத்தும குருவாகவும் கடமையாற்றி வந்தார். இக்காலத்திலே அவர் திருச்சபையின் மேலதிகாரிகளின் மதிப்பைப் பெற்றுவிட்டார். அவரது தாழ்மையும், பிரசங்கவன்மையும், ஆத்தும இரட்சணிய வாஞ்சையும் நாடெங்கும் பரவிற்று. 1884-ம் ஆண்டு மந்துவாநகர மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டார்.

### மந்துவா மேற்றிராணியார்—வெனிஸ் பிதாப்பிதா

மந்துவாநகர மேற்றிராணியாராகவும், அதன்பின்பு வெனிஸ்நகர பிதாப்பிதாவாகவும், கருதினலாகவும் கடமை செய்து வருங்காலத்தில் அவரது பக்தி வைராக்கியமும், அஞ்சாநெஞ்சமும் எவரையும் பிரமிக்க வைத்தது. திருச்சபையின் உள்ளும் புறமும் இருந்த எதிரிகளுடன் போராட வேண்டியவரானார். தொழிலாளி முதலாளி பிரச்சினைகள் பல தலைகாட்டி நின்றன. ஆட்சியாளர் எதிர்த்து நின்றனர். எதிர்ப்பு எவ்வளவு இருந்தபொழுதிலும் நியாயம் தன்னுடன் என்பதை மனதில்கொண்டு தமது கடமைகளைத் தைரியத்துடனும், நீதியுடனும் ஆற்றிவந்ததால் எதிரிகளும் இவருடன் அன்பாக நடந்து கொள்ளக் கற்றுக் கொண்டனர். 1884-ம் ஆண்டு மந்துவா மேற்றிராணியாராக நியமனம் பெற்றவர் 1892-ம் ஆண்டு வெனிஸ் பிதாப்பிதாவாகவும் கருதினலாகவும் ஆக்கப்பட்டுப் 13-ம் சிங்கராயர் பாப்பரசர் காலமானதும் 1903-ம் ஆண்டு ஆவணிமாதம் 4-ம் திகதி பாப்பரசராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

### 10-ம்பத்திநாதபாப்பரசர்:

தேவனின் இராச்சியத்தின் இவ்வுலகத்தலைவராக “பெப்பி” சார்த்தோவை உயர்த்திவைத்தது இவரது தாழ்மையே. தான் ஒரு வறியகுடும்பத்தில் உதித்தவரென்றும் எந்தமகிமைக்கும் தகுதிஇல்லாதவரென்றும் அவர் அடிக்கடி கூறிவருவார். ஆனால், தேவனின் சித்தம் பிறிதாயிருந்தது. 11 வருடத்துக்குமேல் நீடித்திருந்த இவரது ஆட்சிகாலத்திலே திருச்சபை தீவிரவளர்ச்சி அடைந்தது. “நூதனசாதனையா”ரின்திமிர் அடக்கப்பட்டது. கோவிற் சங்கீதத்தில் பல சீர்திருத்தங்கள் கையாளப்பட்டன. புதியமந்திரமாலை (Breviary) பூசைப்புத்தகம் தயாரிக்கப்பட்டன. திருச்சபையின் சட்டங்களைச் சீர்திருத்தி வகுத்து வைக்கும் தொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவையெல்லாவற்றிலும் பெரிதாக இன்று விளங்குவது 10-ம்பத்திநாதர் திவ்வியநன்மையை விசுவாசிகள் நாள்தோறும் பெறுவதற்கும், புத்திவிபரமறிந்த 7வயதுச்சிறுவர், சிறுமியர்களும் திவ்வியநன்மையை வாங்குவதற்கும் அனுமதிகொடுத்ததே. இப்பரிசுத்த பாப்பரசரது சீவியகாலத்திலும் இவரது மரணத்தின்பின்பும் இவரது சலுகையால் தேவன் பலபுதுமைகளைச்செய்யத் திருவுளமானார். இவருக்கு அர்ச்சியசிஷ்டபதவி 1951-ம்ஆண்டு ஆனிமாதம் 3-ந்திகதி திருச்சபை வழங்கலாயிற்று.

---

ஞறு (94) கிறிஸ்தவ வேதத்தைத் தழுவாதவர்கள் என்றால் அவர்களுக்காகஉழைக்க ஒருலட்சம்குருமாருக்கு மேல் வேண்டுமல்லவா?

அன்று கல்வாரிமலையில் யேசு தன்னை ஒரு தகனப்பலியாய் ஈந்தது உலகத்தில உள்ள சகல மக்களுக்காக வல்லவா? ஒவ்வொருஆத்துமமும் ஒரு விலைமதிக்கப்படாத பொக்கிசம். ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று யேசு விரும்புகிறார். இதற்காகவே யேசு உலகத்திற்கு வந்தார். இந்த உண்மையை மக்களுக்கு எடுத்துரைப்பதற்கு ஆட்கள் எங்கே? தேவதிரவிய அனுமானங்கள் ஈந்து ஆசீர் தரும் அப்போஸ்தலர்கள் எங்கே?

ஆகையால் பண்புமிக்க பாலர்களே, வன்மைமிக்க வாலர்களே இதைநீங்கள் உணர்கிறதில்லையோ? நம இலங்கையை எடுத்துக்கொண்டு அதன் இன்றையநிலையை நோக்குமிடத்து மனமொடிந்து, மதிகலங்கி மலைத்தேதான் போகவேண்டியிருக்கிறது. காரணம்? கத்தோலிக்க மெய்மறை நுழைந்து (400) நானூறு வருடங்களுக்கு மேலாகியும் எத்தனைமக்கள் கத்தோலிக்கமெய்மறையில் சேர்ந்திருக்கிறார்கள்? இதை நிவிர்த்திசெய்வதற்குக் கத்தோலிக்க குருமார் அவசியம்தேவை. இந்தப் பரிதாபநிலை எத்தனைவருஷம் போய்க்கொண்டிருக்கும். எத்தனைநாள் நித்திரையில் ஆழ்ந்திருப்போம்; இத்துயிலை விட்டு எழவேண்டாமா? என்ற காந்தியடிகளின் மூரசொலி எங்கள் ஒவ்வொருவரிடமும் எழுப்பப்படவேண்டும். கோடிக்கணக்கானமக்கள் வீணேமடிவது நமக்கு நன்மையா? நம் சொந்தநாட்டு மக்கள்பலர் வீண்குருட்டாட்டத்தில் மூழ்கியிருப்பது அழகா? இவர்களை ஈடேற்ற நாம் முயலாவிடில் பின் யார் முயல்வது?

இளைஞனே! ஆத்துமத்தை இரட்சிக்கும்வேட்கை உன்னிடத்தில் இல்லையா? ஒரு குருவாக வரவேண்டும்என்ற பேரவா உன்னிடம் இல்லையா? “மனிதன் உலகமெல்லாம் தன் ஆதாயமாக்கிக் கொண்டாலும், தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்துவானாகில் அவனுக்குப் பிரயோசனம்என்ன” என்ற யேசுவின் வார்த்தைகள் உன்னுடையகாதில் ஒலிக்கவில்லையா?

ஆம், யேசு உங்கள் இருதயத்தைத் தட்டுகிறார். உங்களோடு அன்புடன் பேசுகிறார். உங்களை உன்னத அந்தஸ்திக்கு அழைக்கிறார். அப்படியானால் ஆண்டவருடைய வார்த்தைகளைத் தட்டுவீர்களோ? வேண்டாம், உங்கள் நல்லெண்ணத்தையும், மேலான நோக்கத்தையும் சிதறடிக்காது பிரமாணிக்கமாய்க் காப்பாற்றுங்கள்.

அன்பான கிறீஸ்தவர்களே, நம்தாய் நாட்டையும், உலகம் அனைத்தையும் யேசுபக்கம்சேர்ப்பது உங்களது கடமையல்லவா? நம தாயாகிய கத்தோலிக்கதிருச்சபை, தேவ அழைத்தல் அதிகரிக்க நாம் செபிக்கவேண்டும் என்று எங்கள்எல்லோரிடமும் கேட்கின்றது. தேவஅழைத்தலாகிய வித்தைப் பலஇளம்உள்ளங்களிலே விதைப்பது உங்கள் கடமையல்லவா? ஒருநாளைக்கு உங்கள்மகன் ஒருகுருஎன்று கேள்விப்பட்டதும் அளவில்லாச் சந்தோஷமடைய வேண்டியவர்கள் நீங்கள் அல்லவா?

ஆகையால் சகோதரர்களே, குருமாரின் அவசியத்தை உணருங்கள். திருச்சபையின் அவாவுக்குப் பணியுங்கள். குருமார் அதிகரிக்க உங்களாலியன்ற உதவிசெய்யுங்கள். விளைச்சலோ தழைத்திருக்கின்றது. ஆனால், அதை எல்லாரும் ஒரே களஞ்சியமாகிய சத்தியதிருச்சபையில் சேர்க்க வேண்டாமா? ஆதலால், “தன் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேளாண்மையின் எசமானை மன்றாடுங்கள்.”

பே. மதி.

---

## பஸ்தொழிலாளிகள் உதவினர்

அயர்லாந்துதேச டபிளின் நகரில்உள்ள பஸ்தொழிலாளர்கள் அனைவரும் தங்கள் வேதனத்திலிருந்து மாதாமாதம் சிறுதொகையொன்றைச் சேர்த்துக் குருத்துவ பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பிவந்தனர். அவர்களது சகதொழிலாளியொருவருக்கான குருத்துவபயிற்சிச் செலவுக்கு அவர்கள் இவ்விதம் கிரமமாக உதவினர். அத்தொழிலாளி அடுத்த புரட்டாசிமாதம் 29-ந் தேதி குருவாக அபிஷேகம் பெறுவதை அத்தொழிலாளர் நேரடியாகக் கண்டுகளிக்கவிருக்கின்றனர்.

அத்தொழிலாளியின் நாமம் சீயன் கேர்னி என்பது. இவர் இளம்வயதில் குருத்துவ பயிற்சிக் கழகத்துக்குச்சென்று பயிற்சி பெற்றுவந்தார். பஸ்தொழிலாளியான அவரது தந்தை திடீரென மரிக்க 5 குழந்தைகளையுடைய தன் குடும்பத்துக்கு உதவி செய்யும்படி அவர் வெளியேறிப் பஸ்தொழிலாளியாகக் கடமையாற்றத்தொடங்கினார். குடும்பநிலை ஒருவாறு சீரடைந்தது. இப்போது சீயன் பயிற்சிக்கான நிதியின்றி வருந்தினார். ஆயின், சகதொழிலாளர்கள் உதவியளித்தனர். இதனால் அவரின் மனஎண்ணம் பூர்த்தியாயது. அடுத்த மாதம் அவர் குருவாக அபிஷேகிக்கப்படுவார்.

---

## தேவதாயின் வணக்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில், தமது அடிமையானவளுடைய தாழ்மையைக் கிருபாகடாட்சத்தோடு பார்த்தருளினார். ஆகையால் இதோ இக்காலமுதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். ஏனெனில், வல்லமைமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினார்” (லூக் I: 46—49) என்று கூறியதுபோல நாமும் தேவதாயாரின் மகிமைக்குக்காரணமான தேவனை அவளோடுகூட மகிமைப்படுத்துவோம். யேசுவின வழியே எம்மைப் பரமபிதாவிடம் கொண்டு செல்லும் மாசற்றபாதை—தேவதாய். அந்தவழியை நாம் தழுவுவோமாக.

—காவலூர் யோபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சகோதரிகளே!

ஆவணிமாத விடுமுறைநாட்கள் ஓடிவிட்டன. புரட்டாதிமாதம் தேவ தாயின் மாசற்ற இருதயப்பக்திக்குரிய முதற்சனியுடன் ஆரம்பிக்கிறது. ஐந்து முதற்சனிக்கிழமைகளில் பாவசங்கீர்த்தனம் பண்ணி, பூசைகண்டு, தேவநற் கருணை பெற்று, செபமாலையின் பரம இரகசியங்களைத் தியானிப்பவர்கட்கு ஏராளமான வரப்பிரசாதங்களை அருளுவதாகப் பத்திமாபதியில் தேவதாயார் கூறியதை இத்தருணத்தில் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

அத்துடன் புரட்டாதி மாதத்தில் 8-ந்திகதி தேவமாதா பிறந்ததிருநாள். 12-ம் திகதி மரியென்னும் திருநாமத்தின் திருநாள். 15-ம் திகதி வியாகுலமாதா திருநாள். இத்திருநாட்களையும் உங்கள் குடும்பத்தவர்க்கு நினைவூட்டித் தேவ தாயின் பக்தியைப் பரப்புங்கள்.

அன்புச் சோதரி ரோஜா.

## புனிதாவின் அறிவுரை

அன்புச் சகோதரி பிரமீளாவுக்கு......

உன் திருமணமடலும் அஞ்சலும் அணமின. மனமிக மகிழ்ந்தேன். பெண்ணின் வாழ்க்கையின் உன்னத இலட்சியம் ஒரு தகுந்த கணவனை அடைவதுதான். திருமண வாழ்வை விளையாட்டாகவும், ஆடம்பரக்காட்சியாகவும் கருதும் இக்கால நங்கையருள் இம்முக்கிய பிரச்சினையையிட்டு ஆழச் சிந்திப்போர் வெகுசொற்பம். திருமணம்பற்றி ஆழச் சிந்திப்பின் உண்மையில் வாழ்க்கையைப் பரிபூரணமாக அனுபவிக்க முடியும்.

திருமணத்துக்கு முந்தியகாலத்தில் ஆத்தும விஷயம் சம்பந்தமாக நீ செய்யவேண்டியது பலவுண்டு. முதலில் கானாவூரில் தம்பதிகட்கு யேசுவிடமிருந்து கிடைத்த ஆசியை அடையவேண்டுமானால் அவருக்கு அழைப்பு அனுப்பவேண்டுமல்லவா? எப்படி அனுப்புவது? அடிக்கடி பாவ சங்கீர்த்தனம் செய்து தேவநற்கருணை அருந்துதல், ஞானப்புத்திமதிகளை அளிக்கும் இஸ்பிரீத்துவைநோக்கி மன்ருட்டு, கூடுமானவேளைகளில் நற்கருணைச்சந்திப்பு, முதலியவற்ருல் இப்பெரிய தேவதிரவிய அனுமானத்துக்கு ஆயத்தம் செய்தல் வேண்டும். ஆசாபாசம் நிறைந்த நூல்களைப் படிப்பதை விட்டு, மெய்விவாகம்பற்றி எழுதப்பட்டுள்ள ஞானநூல்களைப் படித்து இல்லற வாழ்வைப்பற்றி அறிந்துகொள்ளல், மனைவியின் கடமைகளைத் தெரிதல் என்பன மிக முக்கியமானவை. அத்துடன் செபதபதான தருமங்களினுல் உன் ஆத்துமத்தை ஆயத்தப்படுத்தல் வேண்டும்.

அடுத்து மனைவியின் கடமைகளைத் தெரிந்துகொள். புதுமணப்பெண்ணுகப் போகிறவள் என மற்றவர்கள் உன்னை வேலைகளிலீடுபடாமல் தடுக்கலாம். அன்றேல் இதுகாலவரை அன்னைதந்தையரின் செல்லப்பெண்ணுக இருந்திருக்கலாம். ஆனுல் இனிமேல் எந்த நிலையையும் சமாளிக்கத் தயாராயிருத்தல் வேண்டும். உனது வருங்காலக் கணவன் கோடீசுவரராயிருக்கலாம். நடுத்தர உத்தியோகத்தர் அல்லது, ஏழையாகவுமிருக்கலாம். எனினும் ஒருபெண் அறியவேண்டிய வீட்டலங்கரிப்பு, சமையற்கலை, தையற்கலை என்பனவற்றை ஓரளவாவது பழகிக்கொள்ளுதல் வேண்டும். இவைபற்றிய பத்திரிகைத் தொகுப்புகளையும் சேகரித்துக்கொள்.

திருமணகாலத்தில் நீ பாவிக்கும் விலையுயர்ந்த ஆடைகள்போல அதன் பின்னரும் உடுத்தல் வேண்டும் என ஆசைப்படாதே; அது உன்னை அழிவுப்பாதையில் கொண்டுவிடும். பொதுவான பாவனைக்கும், நீடித்த உழைப்புக்குமுரியதான சேலைகளைத் தெரிந்தெடுத்துக்கொள். செலவில் சுருக்கமாகவும், ஆயின் சிறப்பானதாகவும் இருக்கும்வண்ணம் உன் துணிமணிகளை அல்லது வீட்டலங்கரிப்புத் துணிகளைத் தெரியும்போது கவனித்துக்கொள்.

அடுத்து உனது திருமணத்துக்காக அழைப்பிதழ்கள் அனுப்பப்படுமல்லவா? அவ்விஷயத்தில் நீ ஜாக்கிரதையாயிரு. அழைப்பிதழ்களை அனுப்புபவர்கள் தவறுதலாகச் சிலரை மறந்துவிடுகின்றனர். இது பின்னுல் பெரிய மனஸ்தாபத்தைக் கொண்டுவரும். எனவே, வீட்டிலுள்ள மற்றவர்கட்கு உதவியாக நீயே ஒரு பெயர்ப்பட்டியலைத் தயார் செய்துகொள். இத்தருணத்தில் உனக்குத் தெரிந்த கன்னியர்கள், குருமார் என்பவர்களிடமிருந்து மன்ருட்டுக்களைப் பெற்றுக்கொள்ளத் தக்கதாக அவர்கட்கும் அழைப்பிதழனுப்ப மறந்துவிடாதே.

அளவுகடந்த வேலைகளிலும், என்ன நடக்குமோ என்ற ஆயாசங்களிலும் மனதைத் தளரவிடாதே. திடனுயிரு. தேவபராமரிப்பில் உன்னைக் கையளித்துத் திடசித்தத்துடன் உன் அலுவல்களில் தலையிடு. உனக்காக மட்டுமல்ல, உன் வருங்காலக் கணவனுக்காகவும் இறைவனைப் பிரார்த்திப்பாயாக.

உன்மேல்
எல்லா நலன்களையும் விரும்பும்,
**புனிதா.**

## சமையற் குறிப்புகள்

### 1. உருளைக்கிழங்கு மஸ்கெற்:

**வேண்டிய பொருட்கள்:**

(1) உருளைக்கிழங்கு 1 இறாத்தல்
(2) சீனி $1\frac{1}{2}$ இறாத்.
(3) கஸ்கொட்டை 25
(4) சாதிக்காய் 2
(5) சொற்ப நெய்

**செய்கை முறை:** உருளைக்கிழங்கை நீரிலிட்டு நன்ருக அவித்துத் தோல்போக்கி ஒரு பாத்திரத்திலிட்டு நன்ருகக் கடைந்து மாப்பசையாக வரச் செய்யவேண்டும். இதை அடுப்பில் ஒரு பாத்திரத்தில் வைத்துச் சீனியைக் கொட்டிக் கலந்து அதற்குள் சிறு துண்டுகளாக அரியப்பட்ட கஸ்கொட்டைகளையும், சாதிக்காய்த் தூளையும் தூவிக் காய்ச்சவேண்டும். பாணியாக இறுகிவரும்போது ஏற்கனவே நெய்பூசிய பலகையில் கொட்டி நெய்பூசப்பட்ட வாழையிலையினுல் அழுந்தத் தட்டையாகப் பரப்பியபின் சிறு சதுரத்துண்டுகளாக வெட்டி எடுத்து ஆறியபின் போத்தலிலிட்டு மூடிவைத்து சில நாட்களுக்குப் பாவிக்கலாம்.

### 2. லவேறியா (இடியப்பக் கொழுக்கட்டை)

**வேண்டிய பொருட்கள்:**

தேவையான அளவு கோதுமைமா, பயறு, சர்க்கரை, துருவிய தேங்காய்ப்பூ

**செய்கை முறை:** பயற்றைத் [illegible] புாவு செய்து [illegible] கரை, தேங்காய்ப்பூ சேர்த்து, கலவை செய்து வைத்துக் கொள்க. கோதுமை மாவை நன்ருய் அவித்து அரித்தெடுத்து உப்புநீர் சிறிது சேர்த்து அளவான கொதிநீரில் இடியப்பத்திற்குக் குழைப்பதுபோல் குழைக்க வேண்டும். இடியப்ப உரலில் இம்மாவை வைத்து எண்ணெய் அல்லது நெய் பூசிய வாழையிலையில் வட்டமாகப் பிழிந்து கொள்க. கலவையை அரைவட்டத்திற்குக் கரண்டியினுல் பரப்பி வாழையிலையை மடிப்பதன்மூலம் மிகுதிப் பகுதியினுல் கொழுக்கட்டைபோல் மூடிவிடுக. இதை இடியப்பத்தட்டின் மேல் வைத்து அவித்து பிறகு பாவிக்கலாம்.

### 3. லட்டு:

**வேண்டிய பொருட்கள்:**

கோதுமைமா குறுணி 1 இறாத்தல், பாதித் தேங்காய், பசும்பால், நெய், பழவற்றல் $\frac{1}{4}$ இறாத்தல்.

**செய்கை முறை:** தேங்காயைச் சொட்டுகளாக்கி அதனைச் சிறு துண்டுகளாக அரிந்து நெய்யில் பொன்னிறமாகும் வரை பொரித்து எடுக்க வேண்டும். பழவற்றல்களையும் அவ்விதமே செய்க. நெய்யைச் சட்டியில் அளவாக விட்டுக் கோதுமைக் குறுணியையும், சீனியையும் கொட்டிப் பொன்னிறம் வரும் வரையும் வறுக்க வேண்டும். பொரித்திருக்கும் தேங்காய்ச்சொட்டு, பழவற்றல்களைச் சிறிதுசிறிதாகச் சேர்த்துக் கொண்டே வறுக்கவேண்டும். பின் சட்டியை இறக்கி, உடனே காய்ச்சி ஆறிய பாலை விட்டுச் சேர்த்து இளஞ்சூட்டுடனே சிறுசிறு உருண்டைகளாக உருட்டி யெடுத்து மூடியுள்ள ஒரு போத்தலிலிட்டு வைத்துப் பின்னர் பாவிக்கலாம்.

மேலே கூறப்பட்ட மூவகை உணவுகளும் மாலைநேரத் தேநீருடன் சேர்த்து அருந்த ஏற்ற உணவுகளாகும். எப்போதும் ஒரே உணவைச் சாப்பிடுவதைவிட்டு வித்தியாசமான உணவுப் பொருட்களைத் தயாரித்துக் குடும்பத்ினரை மகிழ்விக்கலாம்.

—※—

## ஆலயமணியின் ஓசையை நான் கேட்டேன்........

கோயில் இல்லாஊரில் குடியிருக்க வேண்டாமென்று கூறியிருக்கிருர் ஒருபெரியார். ஏன்தெரியுமா? ஆலயமானது ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும், சிறப்பாகக்கத்தோலிக்கரின் வாழ்விலும் முக்கியம் பெறுகின்றது. ஆலயத்துக்கு நம்மை அழைப்பது ஆலயமணி. அதன் ஓசையானது இல்லத்தலைவிகளைத் தம்கடமைக்கு அழைக்கும்பணியைப் புரிகின்றது. ஒவ்வொரு தடவையும் ஆலயமணியின் ஓசையைக் கேட்கும்போது தாய்மார்கள், குடும்பத்தில் மூத்தசகோதரிகள் செய்யவேண்டியவை இதோ தரப்படுகின்றன:-

### 1. திரிகால மணியோசை:

ஏதடா விடியுமுன் திருந்தாதி தட்டுகிருர்களே என்று அலுத்துக்கொள்கிறீர்களா? நித்திரையை உதறிஎழும்ப விருப்பமில்லையா? சட்டெனத் துயிலெழுங்கள். திரிகாலச் செபத்தைச் சொல்லுங்கள். காலைச்செபத்தையும் ஓதிக்கடவுளின் பாதத்தில் அந்நாளை ஒப்படையுங்கள். நேரகாலத்துடனே காலைக்கடன்களை முடித்து காலையில் செய்யவேண்டிய வேலைகளை ஆரம்பியுங்கள். இதுபோல் நடந்தமையாற்ருன் திருவள்ளுவர் தம் துணைவியைப் பின்தூங்கி முன் எழுவாள் எனப் பாராட்டினுர். மதியவேளை திரிகால மணி கேட்கிறதே. சுவாமியாருக்குச் சாப்பாடு ஆகிவிட்டதாக்கும் எனநீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது. இவ்விதம் பல்லுக்குப் பதம்பார்ப்பதை விட்டுவிட்டுத் திரிகாலச்செபத்தைச் சொல்லித் தேவஅன்னையை, அவர்தம் திருக்குமாரனை, அவரின் உதயத்தை ஒருமுறை சிந்தியுங்கள். மாலைநேரம் மீண்டும் திரிகாலமணி. மற்ருெரு முறை மரியன்னையைத்துதிக்க வாய்ப்புக் கிடைக்கிறது. இவ்விதம் ஒரு நாளில் மும்முறை சொல்லப்படுவதாலேயே இது திரிகாலச்செபம் என அழைக்கப்படுகின்றது. நீங்கள் செபிப்பதோடுமட்டுமல்ல உங்கள் குடும்பத்தோரைவரையும் சிறப்பாக சின்னஞ்சிருரையும் இப்பக்தியில் ஈடுபடுத்துங்கள்.

### 2. திவ்வியபூசைமணி:

நாளாந்தம் ஆலயங்களில் ஒப்புக்கொடுக்கப்படும் திவ்வியபூசைக்கு நம்மை அழைக்கிறது. வீட்டிலுள்ள சிறுவர்களை நேரத்தோடு எழுப்பி உடையணிவித்துப்பூசைக்குச்செல்லப் பழக்குங்கள். வசதியானுல் நீங்களும் அவர்களுடன் பூசைக்கு வாருங்கள். பூசைப்பலியைவிட உத்தமமான செபம்வேறில்லை. இதைத்தவிர ஞாயிறுவாரங்களில் யாவரும் திவ்வியபூசைக்குச் சமுகமளித்தல் வேண்டுமென்பது நீங்கள் அறிந்ததே. ஞாயிறு இறை [illegible] கடவுளின் நாளிலிருந்து நாம் களவெடுப்பது சரியா? நம்மில் எத்தனையோபேர் ஞாயிறுபூசைக்கு நேரங்கழித்து வருகிருர்கள். குடும்பத் தொல்லை, சிறுபிள்ளைகளின் பராமரிப்பு, கணவனுக்கு காலைக்காப்பி அளித்தல் போன்ற எத்தனையோ சாக்குப்போக்குகளைச் சகோதரிகள் சொல்லிக்கொள்கிருர்கள். சிறுவயது தொடக்கம் பிள்ளைகட்கு ஞாயிறுபூசைக்கு நேரத்துடன் போகும் பழக்கத்தை உண்டாக்குவதுடன் நாமும் அவர்களுடன் செல்லும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். குடும்பத்திலுள்ளார் அனைவரும் ஞாயிறுகடமையை அனுசரிப்பதுபற்றிப் பரிசீலனை செய்து அதுபற்றி நடபடிக்கைகள் எடுப்பதன்மூலம் ஒவ்வொரு சகோதரியும் இப்பழக்கத்தை தன்குடும்பத்தில் வேரூன்றச்செய்தல் வேண்டும்.

### 3. மரித்தோருக்காக அடிக்கப்படும் துக்கமணி:

ஆலயத்தில் துக்கமணி அடிக்கப்படுகிறது. யாரோ மண்டையைப் போட்டுவிட்டான் என்று நம் பாட்டிகள் பேசிக்கொள்கிருர்கள். கமலம் ஆரது இறந்தது என அடுத்தவீட்டு அம்மாள் விசாரிக்கிருள். இந்தவீட்டு அம்மாள் இறந்தவரின் வியாதிகள் அவரின் குடும்ப வரலாறுகள், குடும்பத்திலுள்ள விரும்பத்தகாத விஷயங்கள் என்பனபற்றிப் பாரதம் படிக்கிருள். குடும்பச்சொத்துகளை எப்படிப் பிரிப்பார்கள். அவர்களின் வருங்காலமென்ன என்பதெல்லாம் இந்தச்சிறிய பாராளுமன்றத்தில் ஆராயப்படுகின்றது. அங்கு கூடும் பெண்மணிகளிடையே ஏன் இந்த வம்புப்பேச்சு? எமது மந்தையில் ஒரு அங்கத்தவர் சமாதான நித்திரையாகிவிட்டார் என்கிறது ஆலயமணி. நாம் செய்ய வேண்டியது என்ன? மரித்தஆத்துமத்தின் இளைப்பாற்றிக்காக மன்ருடுவதே முதற்கடமை. வீட்டிலுள்ள குழந்தைகட்கும் இவ்விதபழக்கத்தை ஏற்படுத்துவோம். மரித்தோர் மணியோசை கேட்டதும் எங்கள் கடமை

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகராதிகள் தோன்றுமுன் தமிழர்கள் சொற்பொருட்களை எவ்வாறு அறிந்தனர்

தமிழ்மொழியில் வழங்கும் சொற்களைச் செய்யுள் வழக்குச் சொற்கள், உலக வழக்குச் சொற்கள் என இரு கூறுகளாய் வகுக்கலாம். செய்யுள் வழக்கை இலக்கிய வழக்கெனவும், உலக வழக்கைப் பேச்சு வழக்கெனவும் கூறலாம். இலக்கியச் சொற்களுக்குப் பொருள் தெரிந்துகொள்ள நிகண்டுகள் தோன்றின.

நிகண்டு என்பது சங்கத மொழிச் சொல். இதற்குத் தொகுப்பு என்பது பொருள். நன்னூல் ஆசிரியரான பவணந்திமுனிவர், "பிங்கலம் முதலா நல்லோர் உரிச் சொலின் நயந்தனர் கொளலே" என்னுமிடத்து நிகண்டை உரிச்சொல் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியத்தினின்றே நிகண்டுகள் கிளைத்து எழுந்தன எனலாம். தொல்காப்பிய உரியியலில் இலக்கியச் சொற்களே தொகுக்கப்பட்டுள்ளன. "பெரும்பான்மையும் செய்யுட்குரிய வாய் வருதலின் உரிச்சொல்லாயிற்று" என்று சேனவரையர் குறிப்பிடுவதும் காண்க. பலபொருளைக் குறிக்கும் ஒரு சொல், ஒருபொருளைக் குறிக்கும் பல சொல் ஆகியவை தொல்காப்பிய உரியியலில் காணப்படுகின்றன. தொல்காப்பியர் வகுத்த முறைகளை ஆதாரமாகக் கொண்டு நிகண்டுகள் எழுதப்பட்டன.

**வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம். B. A. (Lond.)**

தமிழில் திவாகரம், பிங்கலம், சூடாமணி நிகண்டு, நாமதீபநிகண்டு, உரிச்சொல்நிகண்டு, அகராதி நிகண்டு முதலிய பல நிகண்டுகள் இடைக்காலத்திலும், பிற்காலத்திலும் தோன்றின. இவற்றுள் திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகிய மூன்றும் சிறந்தவையெனக் கருதப்படுகிறது. திவாகரம் திவாகரர் என்ற சமணப்புலவரால் எழுதப்பெற்றது. இதனைச் சேந்தன் என்ற சிற்றரசன், எழுத ஆதரவளித்தமையால் இது சேந்தன் திவாகரம் எனவும் படும். இது, கி. பி. ஏழாம், அல்லது எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாமெனத் தமிழறிஞர் கருதுகின்றனர். திவாகரம் தெய்வப்பெயர்த் தொகுதி, மக்கட்பெயர்த் தொகுதி முதலிய பன்னிரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்நிகண்டு சூத்திர யாப்பில் எழுதப்பட்டுள்ளது. திவாகரத்தில் நாள், கோள்களின் பெயர்கள், காலப்பெயர்கள், மழை மேகம் முதலியன தெய்வப் பெயர்த்தொகுதியில் காணப்படுகின்றன. மக்கட் பெயர்த் தொகுதியில் மக்களின் உறுப்புகளுக்குரிய பெயர்களும், விலங்குப் பெயர்த் தொகுதியில் மிருகம், பறவை முதலியவற்றின் உறுப்புகளுக்குரிய பெயர்களும் காணப்படுகின்றன. ஒருசொல் பல்பொருட் தொகுதியில் ஒரு சொல்லுக்குரிய பொருள்கள் எல்லாம் தரப்பட்டுள்ளன. பல்பொருட்கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதியில் இருசுடர், முக்குணம், நாற்கரணம் போன்று எண்ணால்வரும் தொகைப் பொருள்கள் காணப்படுகின்றன.

சேந்தன் திவாகரத்திற்குப்பின் தோன்றிய நிகண்டு பிங்கலந்தையாகும். இது பிங்கலர் என்பவரால் இயற்றப்பெற்றது. நன்னூலில் பிங்கலத்தைப்பற்றிய செய்தி காணப்படுவதால் இது கி. பி. 13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது. திவாகரத்தில் இல்லாத பல சொற்கள் பிங்கலந்தையில் சேர்க்கப்பட்டுள்ளன. பிங்கலந்தை பத்துப் பகுதிகளையுடையது. பத்தாவது பகுதியில் ஒருசொல் பல்பொருள்வகை அகரவர்க்கம், ககரவர்க்கம் என எழுத்துக்களின் முறைப்படி சொற்கள் தரப்பட்டிருப்பதால் சொல்லை உடனே கண்டு பிடிப்பது எளிது. திவாகரத்தில் காணப்படும் பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி பிங்கலந்தையில் இல்லை.

நிகண்டுகளில் சிறப்புடையது சூடாமணி நிகண்டு ஆகும். இதனைத்தான் பிற்காலத்தில் தமிழ்ப்பண்டிதர்கள் பயின்று வந்தனர். இதனை இயற்றியவர், "நிகண்டு சூடாமணி தானுரைத்த மண்டலவன் குடிகொண்டது நீடு தொண்டை மண்டலமே" என்னும் சதகத்தொடரால், தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த மண்டலபுருடர் எனத் தெரிகிறது. இவர் வாழ்ந்தது கிருஷ்ணராயன் காலம் என விளங்குகிறது. இக்கிருஷ்ணராயன் 9-ம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த ராட்டிரகூட அரசனாகிய இரண்டாம் கிருஷ்ணராயன் என்று சிலரும், 16ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த விசய நகர மாமன்னன் கிருட்டிணராயன் என்று வேறு சிலருங் கருதுகின்றனர். திவாகரம், பிங்கலம்போல் சூத்திர யாப்பாலாகாமல், இது விருத்தப்பாக்களால் யாக்கப்பட்டுள்ளது. எனவே, இது மனப்பாடஞ் செய்வதற்கு எளிதானது. இதனாலேயே பிற்காலத்தில் தமிழிலக்கிய ஆர்வமுடையார் பலரும் பயின்று வந்தனர். இந்நிகண்டு சொற்பொருள் கூறுவதாய் இருப்பினும் இதிலுள்ள விருத்தப்பாடல்கள் செய்யுள்நலம் கனிந்து, கற்போர்க்கு பெரிதும் இன்பம் அளிக்கக் கூடியனவாயுள்ளன.

இதன்பின் உரிச்சொல் நிகண்டு, கயாதரர் இயற்றிய கயாதரம், பாரதிதீபம், ஆண்டிப்புலவர் இயற்றிய ஆசிரிய நிகண்டு முதலாம் பல நிகண்டுகள் தோன்றின. இவ்வாறு எழுந்தவற்றுள் கி. பி. 1594இல் சிதம்பர ரேவண சித்தர் இயற்றிய அகராதி நிகண்டு சிறப்பு வாய்ந்தது. இது 3368 சொற்களின் பொருள்களை அகர வரிசையில் கூறுகிறது. அகராதி என்னும் பெயரை முதன்முதல் வழங்கியவர் ரேவண சித்தரேயாவர்.

தற்காலம் சொற்பொருட்களையறிய அகராதிகளைப் பயன்படுத்துகிறோம். ஆனால், நம் முன்னோர் நிகண்டுகளில் உள்ள சூத்திரங்களையோ, செய்யுள்களையோ மனனம் செய்து சொற்பொருட்களை அறிந்திருந்தனர். அவர்களை நடமாடும் அகராதிகள் எனக் கூறுவதும் பொருத்தமுடையதே.

## ❁ அமெரிக்கா

கத்தோலிக்க நிலையமொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மகாஞானவொடுக்கமொன்றில் சேரவிரும்புபவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்தருளவேண்டுமென இங்கு 3 மாதகாலங்கட்குமுன்னர் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆயின் ஒருமாதத்தின் பின்னர் குறிப்பிட்ட தொகைக்கும் அதிகமாக விண்ணப்பங்கள் வந்தமையால் விண்ணப்ப முடிவு தேதியை அந்த ஒருமாதத்தின்பின்னர் நிறுத்திவிட்டனர். வந்திருந்த விண்ணப்பங்களில் அரைவாசிக்குமதிகமானவை புரொட்டஸ்தாந்த பாதிரிகளிடமிருந்து கிடைத்துள்ளன.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், மாசில்லாதமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். மாட்டீன் டி பொறஸ் அவர்களின் வேண்டுதலாலும் நான்கேட்ட கருமம் அனுகூலமாயிற்று. இவர்களின் நாமம் புகழப்படும்படியாக இதனைப் பிரசுரிக்கின்றேன்.

ஒருபக்தன். 154/62

## மகளிர்மன்றத் தொடர்ச்சி

கள் அனைத்தையும் இரண்டொரு நிமிடங்கள் நிறுத்தி மரித்தவிசுவாசிக்காக வேண்டிக்கொள்ளும் பழக்கத்தை எங்கள் கத்தோலிக்க குடும்பங்களில் உண்டாக்குவதற்குச் சகோதரிகளின் ஒத்துழைப்பு அவசியம் தேவை.

**4. தேவநற்கருணை ஆசீர்வாத மணியோசை :**

ஞாயிறுவாரங்களிலும், கடன்திருநாட்களிலும் மற்றும்பல சந்தர்ப்பங்களிலும் மாலைஆராதனைக்கு எம்மை அழைக்கிறது இம்மணியோசை. மாதர்களாகிய நாம் ஒருங்கு கூடி வம்பளப்பதைவிட்டு மாலைவேளையைத் தகுந்தவிதமாகச் செலவிட ஆலயத்தைநாடுவோமாக. வேலைகள் முடிவடைந்து ஓய்வாக இருக்கும் இந்நேரத்தில் உலாவச்செல்வதுபோலச் சிறிது நடந்து ஆலயத்துக்குச் செல்வோம். அங்கு சிறிதுநேரத்தை மாலையாராதனைகளில் கழிப்போம். தேவஆசியுடன் வீடு திரும்புவோம். இது ஒரு சிறந்த பொழுதுபோக்குடன் எம்மவர் அனைவருக்கும் ஓர் உத்தமமான பக்திக் கிருத்தியமுமாகும்.

**5. பல்வேறு சந்தர்ப்பங்களில் மணியோசை :**

அரசர்கள் நியமனம், பாப்பரசர் தெரிவு, பக்திக்கூட்டங்கள் கூடுதல், திருச்சபையின்மகிமைக்காலங்களென்ற பலசந்தர்ப்பங்களிலும் ஆலயமணியானது அசைந்தாடி அச்செய்திகளை எமக்குத் தெரிவிக்கின்றது. மணியடிக்கிறார்கள் ஏனம்மா? எனக்குழந்தைகள் எம்மை நச்சரிக்கிறார்கள், எங்கள் வேலையலுப்பில் மனக்கவலையில் அவர்களுடன் சீறிவிழுவது சரியல்ல. மணியோசையின் காரணத்தை அறிந்துகொண்டு அதை நமசிறார்கட்கும் விபரிக்க வேண்டியதவசியம். உதாரணமாகப் பாப்பரசரின் தெரிவுக்காக மணியடிக்கப்பட்டால் பாப்பரசர்பதவி பற்றியசெய்திகள், அவர் தெரிவுசெய்யப்படும்விதம் என்பனபற்றி உங்கள் குழந்தைகளுடன் கலந்துரையாடுங்கள்.

சில இடங்களில் பாடசாலை ஆரம்பமாவதற்காக ஆலயமணி அடிக்கப்படுகிறது. இச்சப்தம்கேட்டதும் பிள்ளைகள் தமது புத்தகங்கள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு பாடசாலைக்கு நேரத்துக்குப்போகச் செய்வது மாதர்களே உங்கள் கடமை.

திருமணச்சடங்கின் போது ஆலயமணி ஆர்ப்பரிக்கின்றது. அப்பாடா இன்னாருக்கும் இன்னாருக்கும் தாலி கட்டுகிறார்கள் எனப் பெருமூச்செறியாதீர்கள். அந்தக்குடும்பங்களைப்பற்றி ஆவலாதிகள் அளிக்காதீர்கள். இத்தம்பதிகள் நீண்டகாலபாக்கியங்களுடன் சிறப்பாகச் சிறந்த கத்தோலிக்க குடும்பமாக ஒழுகும்படி இறைவனைப் பிரார்த்தியுங்கள். நீங்கள் விவாகமானவராயிருப்பின் இதேபோன்ற ஒரு ஆலயமணியோசையுடன் ஆரம்பித்த இல்லறவாழ்வில் உன்னதகத்தோலிக்க சீவியத்தை அனுசரிக்கின்றீர்களா? உங்கள்கணவன் பிள்ளைகட்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச்செய்கின்றீர்களா? என்பவைகளை ஒருமுறை சிந்தியுங்கள். உங்களை நல்வழிப்படுத்தும் பிரதிக்கினைகளை எடுத்துக்கொள்ளுங்கள்.

இவ்விதமாக ஆலயமணியோசையின் விவித அறிவிப்புகளை நாம் கேட்கும்பொழுதெல்லாம் இறைவன் நமமுடன் பேசுகிறாரென எண்ணி அந்தந்தக் கருமங்கட்குரிய கத்தோலிக்க கடமைகளைப் புரிவோமாக.

## ORDER NISI.

**In the District Court of Jaffna.**

In the matter of the intestate estate of Leo Thomas of Matbagal, Jaffna late of Ipoh in Federation of Malaya.
Deceased.

Testamentary
Jurisdiction No. 1142.

Margaret Lena Thomas widow of Leo Thomas of Bankshall Street, Jaffna. Petitioner.

Vs.

Minor 1. Mary daughter of Thomas
„ 2. Thomas Anton
„ 3. Thomas Alfred
„ 4. Helen daughter of Thomas
„ 5. Terresa daughter of Thomas
„ 6. Anne daughter of Thomas
„ 7. Thomas Noel
„ 8. Doris daughter of Thomas
„ 9. Bernadine daughter of Thomas all of Bankshall Street, Jaffna.
10. S. M. J. Louis of 4th Cross Street, Jaffna: the 1st to 9th Respondents are minors appearing by their guardian ad litem the 10th Respondent.
Respondents.

This matter coming on for disposal before N. Sivagnanasundaram Esquire District Judge, Jaffna on the 23rd day of May 1962 in the presence of Mr. A. Homer Vanniasinkam, Proctor on the part of the petitioner and the affidavit of the petitioner dated the 7th day of May 1962 having been read: It is ordered that the abovenamed 10th respondent be appointed guardian ad litem over the minors the 1st to 9th Respondents for the purpose of protecting their interest and of representing them in this case and that the petitioner be declared entitled to have letters of administration to the estate of the said intestate as his widow and directing such letters of administration be issued to her accordingly—unless the Respondents or any other person or persons interested shall appear before this Court on or before the 5th day of September 1962 and state objection or show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Jaffna this 23rd day of May, 1962.

Sgd. O. L. de Kretzer,
District Judge, Jaffna.

## ORDER NISI.

**In the District Court of Jaffna.**

In the matter of the intestate estate of the late Anne Saverimuttu widow of Antony Duraisamy Saverimuttu of Jaffna. Deceased.

Testamentary
Jurisdiction No. 1120.

James Machael Emmanuel Saverimuttu of St. Alban's Place, Bambalapitiya. Petitioner.

Vs.

Miss Mary Anne Beatrice Saverimuttu of Main Street, Jaffna
Respondent.

This matter coming on for disposal befor N. Sivagnanasundaram Esquire District Judge, Jaffna on the 7th day of March 1962 in the presence of A. Homer Vanniasinkam Esquire, Proctor on the part of the petitioner and the affidavit of the petitioner dated the 20th day of November 1961 having been read: It is ordered that the petitioner be declared entitled to have letters of administration to the estate of the said intestate as her son and one of the heires and directing that such letters of administration be issued to him accordingly—unless the Respodent or any other person or persons shall appear before this Court on or before the 7th day of September 1962 and show cause to the satisfaction of this Court to the contrary.

Jaffna this 7th day of March, 1962.

Sgd. O. L. de Kretzer,
District Judge, Jaffna.

துர் பழக்கம் ஒரு படுக்கையைப் போன்றது; அதில் விழுவது எளிது; எழுவது கஷ்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதாயின் வணக்கத்தில் மலரினங்கள்

**வானமண்டலத்தை ஏறெடுத்துப் பார்ப்பவர்கள் ஆகாய வெளியிலே வல்லதேவனின் கைவண்ணத்தைக் கண்டு அவரது மகிமையை உணர்ந்துகொள்வர். இயற்கையிலே இறைவனைக் கண்டுணரும் பெற்றி நாஸ்திகருக்கு இல்லை. அழகு மலர்களிலே ஆண்டவனின் பேரெழில் காணலாம். இவ்வளவு அழகான மலர்களைப் படைத்தும் அவற்றிற்கு மனிதனைப்போல ஓர் ஆன்மாவைப் படைத்துக் கொடுக்கவில்லை.**

இந்தமலர் இனங்கள்யாவும், இறைவனின் சிருட்டிப்பிலே அதிஉன்னதமான சிருட்டியும், மனிதஇரட்சிப்புக்கு என்று வாக்குப்பண்ணப்பட்ட இரட்சகருக்கு மாதாவாக உயர்த்தப்பட்டவளும், அதிரூபலாவண்ணியமுடையவளும், ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளுமான மரியாயின் மகிமையை எடுத்தியம்பி நிற்கின்றன. மனிதகுலத்தின் சாபத்துக்குக் காலான ஆதாமின் பாவத்திற்கு அற்பமேனும் ஆளாகாமல் உற்பவத்திலேயே மாசணுகாமல் இருக்கும்படி உயர்த்தப்பட்ட கன்னிகையின் புகழ்பாடும் மலர்கள், அவளின் வணக்கத்தில் பெருமளவு பங்கெடுக்கின்றன. தேவதாய் பல இடங்களில் பலவித மலர்களுக்கு உவமிக்கப்பட்டுள்ளாள். திருச்சபையும், புனிதர்களும் அத்திருக்கன்னிகையை வழிபடும்போது மலர்களை அவளது அழகுக்கும், அவளிடம் விளங்கிய புண்ணியங்களுக்கும் அடையாளமாக எடுத்துக்காட்டி வந்திருப்பதை அறியலாம். மலர்கள் பலஉண்டு. அவற்றின் தோற்றம் ஒன்றைவிட ஒன்று வேறுபட்டிருக்கும். அவற்றின்சாயல், நிறம், குணம், தன்மை என்பன வித்தியாசமானவையாய் உள்ளன. மலர்கள், அவற்றின்நிறம் அமைப்பு குறித்து மனிதரின் இயல்பு—பண்புகள், இலட்சணங்களுக்கு ஒப்பிடப்படுகின்றன. உதாரணமாகப் பெண்களை—மலர்விழி என்றும், அவர்களின் பாதங்களைத் தாமரைபோன்றபாதம் என்றும், அவர்கள் முகத்தை மலர்முகம், கன்னத்தை ரோசாபோன்ற கன்னம் என்றும் பலவாறு வர்ணிப்பது புலவர் மரபு. ஈண்டு தேவதாயாரின் இலட்சணம், பண்பு, என்பனவற்றுக்கு உவமிக்கப்படும் மலர்களையும் அவை திருச்சபையின் வணக்கத்தில் எத்தகு இடம்பெற்றுள்ளன என்பதையும், வேதநூலில் தேவதாயின் தோற்றத்துக்கு முன்னரே அம்மலர்களின் பெருமை எவ்வாறு விளங்கியதுஎன்பதையும், அந்தக்கோட்பாடுகளும், வசனங்களும் எடுத்துக்காட்டுகளும் தேவதாயாருக்கு எவ்வாறு பொருந்துகின்றன என்பதையும் ஆராய்வோம.

மலர்கள் பேசாமடந்தைகள்போல—வாயில்லாப் பிராணிகளைப்போல மௌனமாயிருப்பது பெருங்குறைபோலவே தோன்றுகிறது. வானமண்டலத்திலே மலர்களைப்போல் சுடர்விட்டொளிரும் அழகிய தாரகைகளையும், அண்டகோளங்களையும் தன் அறிவுத்திறனல் ஆராய்ந்து வியந்துகொண்டிருக்கும் மனிதன், பேசும் ரோசாவை முணுமுணுக்கும் நீலோற்பவமலரை, பாடும் தேன்சிட்டைக் காணும் வாய்ப்புப் பெறுவானுகில் அவன் வியப்புவிரிந்து உள்ளத்தில் உவகை எய்துவான்.

மலர்கள்எல்லாம் ஊமைகள் தான் என்று கூறிவிடமுடியாது. அவை எல்லாம் மனுக்குலத்தின் இராக்கினியும், விண்ணவரின் அரசியும்—பரமபிதாவின் குமாரத்தியும சுதனின்தாயும், ஸ்பிரீத்துவின் நேசபத்தினியும் மாந்தரில் மாணிக்கமும், உலகசிருட்டிப்பின் சிகரமும், அதிரூபலாவண்ணியமும், வரப்பிரசாத சம்பூரணியுமான தேவஅன்னையின் புகழை வாய்விட்டுப் பாடுகின்றன. ஒவ்வோர் மலர் இதழும் தேவஅன்னையைப்பற்றிப்பேசும் பிரசங்கமேடை. ஒவ்வொரு அரும்பும் வானோன் வல்லமையை வாயாரத் துதிக்கும். அந்தமலர்களின் ஒவ்வொரு நாரும் தேவதாயின் மாண்பினை மீட்டு நாதமெழுப்பும் வீணை நரம்புகள்தான்.

## ரோசா என்கிற புஷ்பமே

தேவதாயாரின் பிரார்த்தனையில் "உரோசா என்கிற புஷ்பமே" என்று நாம் அவளை வாழ்த்துகிறோம். செபமாலைமாதாவின் திருநாளில் பாடப்படும் 'வேஸ்பர்' எனும் மாலையாராதனைப்பாடல்கள், "மாடாப்புருவைப்போலும், நீரோடைகளின் அருகில் நாட்டப்பட்ட ரோசா"போலும் அழகுள்ளவள் என்று தேவதாயை வர்ணிக்கின்றன.



இங்கு தேவதாயின் அழகுக்கு ஒப்பிடப்படும்ரோசா பலஸ்தீனுவில் ஆற்றங்கரைகளில் காணப்படும் 'ஓலியாண்டர்' அலரி எனும் பூச்செடியின் மலர்தான் என்று பலஸ்தீனுவின் பூ ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஓலியாண்டர் எனும் மலர்ச்செடிக்கு நீரோடைகள் உயிரூட்டுவதுபோல் தேவதாயாரின் மகிமைக்குஊற்ருயிருப்பவர் சர்வவல்லபதேவனுமே. யாக்கோப்பின் கிணற்றடியில் சந்தித்த சமாரித்தப் பெண்ணுக்கு சீவியசலம் அளிப்பதாகக் கூறியவரே தேவதாயாருடைய மகிமைக்கு சீவியசலமாக இருக்கிருர். கடவுள் கொடுத்த சீவசலம் பெரும் ஊற்ருகி நித்தியகாலமும் பிரவாகித்து ஓடிக்கொண்டிருக்கிறது தேவன் அவளைத் தமது வல்லமையால் உயர்த்தி மகிமைப்படுத்தியிராவிட்டால், அவரது பெருமையுடைய மற்றப் படைப்புகளைப்போல் அவளும்ஒன்றும் இல்லாமைக்கு ஆளாகியிருப்பாள். அவர் தமது கரத்தின் வல்லமையால் அவளை உயர்த்தினர்.

யெறிக்கோவின் ரோசாச்செடி "வசந்தகாலத்திலே புஷ்பிக்கும் ரோசாபோலவும், நீரோடைகளின் கரையைத் தொட்டு வளரும் லிலிகளைப்போலவும சென்மபாவமில்லாத கன்னிகையும் துலங்குகிருள்" என்ற அடிகள் லூர்துமாதாவின் திருநாளில் காலையில் பாடப்படும் கீதத்திலே கூறப்படுகின்றன. செபமாலைமாதாவின் திருநாள் பூசையிலும் யெறிக்கோவின் ரோசாப் பூவே, வசந்தகாலத்தின் ரோசாவே என்னும் பாவடிகளைச் சர்வப்பிரசங்கி 50-ம்அதி. 7-ம் வசனத்தை இங்கு எடுத்தாண்டு சற்று மாறுபடுத்தி பாடுகிருர்கள். சர்வப்பிரசங்கியில் குறிப்பிடப்படும் ரோசா நாம் மகிழ்ச்சியுடன் விரும்பும் ரோசா அல்ல, ஆனல், பரிசுத்த பூமியிலே பங்குனிமாதத்தில் மலைச்சாரலிலே புஷ்பிக்கும் மலர்களேஎன்க. கருஞ்சிவப்பு நிறமான இம்மலர்கள் ஒவ்வோர் இதழிலும் அடிப்பாகத்தில் மஞ்சள் புள்ளியும் அதன்மத்தியில் ஓர் கரும் புள்ளியும் உடையனவாய் இருக்கக் காணலாம். றிச் (Rich) என்னும் அறிஞன் இந்த மலர்களைப் பின்வருமாறு உருவகப்படுத்துகின்ருர். 'கருஞ்சிவப்பு மலர்கள் வசந்தகாலத்தில் கல்வாரிக்குன்றிலே யேசுநாதர் சிந்திய செங்குருதிக்கு அடையாளமாகவும், அம்மலர்களின் பொன்மயமான அடிப்பாகம் செபமாலைத்தியானத்தில் நாம தியானிக்கும் மோட்சானந்த மகிமைக் காரணிக்கங்களில் முதலாவதை [illegible] யும், பொன்[illegible] பத்துடன் பாஸ்கா ஞாயிறு அன்று யேசுநாதர்—நமது இரட்சகரும் இராசாவுமானவர் உயிர்த்தெழுந்த மாட்சிமையையும் குறிப்பால் உணர்த்துகின்றன." யெறிக்கோவின் ரோசா என அழைக்கப்படும் இச்செடி உத்தானச்செடி என்றும் அழைக்கப்படுகின்றது.

## லீலி மலர்

தேவதாயாரைப்பற்றி வர்ணிக்கையில் பலவகை லீலிமலர்கள் உவமையாகக் கூறப்படுகின்றன. மாசற்றகன்னியும், தேவதாயுமான மரியாய் முட்களின்நடுவே உதித்தலீலி என்று அநேகமாக அழைக்கப்படுகிருள். சலமோன் அரசனின் உன்னத சங்கீதத்தில் இரண்டாம் அதிகாரம் முதலாம வசனத்தில்; "நான் காட்டில் மலர்ந்த பூவைப்போலவும், பள்ளத்தாக்குகளில் உதித்த லீலியுமாயிருக்கிறேன்" என்ற வாக்கியங்கள் தேவதாயாருக்கும் பொருந்தும். "கியாசிந்" என்னும இனத்தைச் சேர்ந்த இந்தலீலி, தேவதாயின் நீலத்துகில்போன்ற நிறமுடையது. வருடந்தோறும் கலிலேயாவின் மலைச்சாரலிலும், கார்மேல், சீடோன் மலைச்சாரலிலும் மாசிமாதமுதல் சித்திரைவரை நீலநிறமான மணிகள்போன்ற இப்பூக்கள் மலர்ந்து நிறைந்து காணப்படும. தேவதாயார் தமது நீலப் போர்வையால பாவிமனிதரை மூடி மறைப்பதுபோல இம்மலர்களும் அந்த மலைச்சாரல்களை மூடியிருப்பது காணலாம். தேவதாயாரைப் புகழ்ந்துபாடிய ஒருபுலவர்: "நீலநிறத்து ஆடை அணிந்த அதிரூபவதி" என்று குறிப்பிடுகிருர். இசையாஸ் ஆகமம் 35-ம் அதிகாரத்தில்உள்ள வசனங்களை அப்படியே எடுத்து ஓரிருசொற்களை மாற்றி "லீலியைப்போல் கன்னிகை புஷ்பிப்பாள்; அவள் அரும்பித் துளிர்விட்டுப் புஷ்பிச்சியாலும் ஆனந்தத்தாலும் நிரப்பப்பட்டு அக்களித்திருப்பாள்" என்று பாடப்படுகிருள். வெண்மையான லீலி மலர் கன்னிசுத்தத்துக்கு அடையாளமாம். எனவேதான் கன்னிமை கெடாத—அற்பமும் மாசணுகாத தேவதாயாரும் வெண்மையான லீலி மலருக்கு ஒப்பிடப்படுகிருள். சர்வப் பிரசங்கி 39-ம் அதிகாரத்தில், "லீலியைப்போல் மலர்களைப் புஷ்பியுங்கள்" என்று கூறப்படும் வசனத்தால், தேவதாயாரே குறிப்பிடப்படுகிருள். இங்கு எடுத்துக்காட்டப்பட்ட லீலிமலர்கள் தங்கநிறமானவை "ஐரோப்பிய ஐறிஸ்" என அழைக்கப்படும் இவை பலஸ்தீனுவின் நீரோடைகளின்மருங்கிலே காணக்கிடக்கின்றன. தங்கம்போன்ற இந்த லீலிப்புஷ்பங்கள் தேவதாயின் மாண்பினைக் காட்டாநிற்கின்றன. அம்மலர்களில் நரம்புபோல் கோடிட்டு ஊதாவர்ணம் காணப்படுகின்றது. இந்த ஊதாவர்ணம் தேவதாயின் வியாகுலங்களைக் குறிக்கின்றது. கல்வாரிமலையில் இரத்தம் சிந்திப் பலியான யேசுவின் துயரக்காட்சியால் மனம்நொந்து வருந்திய மாதா அல்லவா தேவதாய். அந்தத்துயரத்தை இந்த ஊதாவர்ணம் உறுத்துகின்றது.

காலஞ்சென்ற பரிசுத்ததந்தை பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர் தேவதாயாரின் இராக்கினித்துவத்தை உறுதிப்படுத்தி வருடந்தோறும் வைகாசிமாதம் 31-ந் தேதி அதைக்கொண்டாடும்படி ஒருபுதிய திருநாளை ஏற்படுத்தினர். பரலோக பூலோக இராக்கினியான தேவதாயாரின் மகிமையை அனேமோன் (Anemone) என்னும் பூவால் உணர்த்துகிருர்கள். இராசஉடைகளில் பெரும்பாலும் காணப்படும் நிறமான மிகவும் பிரபல்லியமான நீலங்கலந்த சிவப்பு நிறமான பூத்தான் இது.

## இயற்கையும் தேவதாயும்

பூமியிலும் வானத்திலும் உள்ள சகல படைப்புகளும் தேவதாயாரைப் புகழ்ந்து அவளுக்குச் சேவைசெய்கின்றன. காட்சியாகமம் 12-ம் அதிகாரம் முதலாம் வசனத்தில் அருளப்பர் வர்ணிப்பது யாதெனில்: "வானத்திலே ஒரு ஸ்திரீ சூரியனை ஆடையாக அணிந்திருந்தாள். அவளுடைய பாதங்களின்கீழ் சந்திரனும், அவளது சிரசின்மேல் பன்னிரு நட்சத்திரங்களுள்ள ஒரு கிரீடமும் இருந்தது" என்று வரும் இந்தவாக்கியங்கள் தேவதாயாரையே குறிக்கின்றன. தேவதாயார் ஜெஸ்சேயன் கோல் என்றும், சீயோனின் சைப்பிறஸ் என்றும், லிபானுஸ் தேசத்தின் சீடர் மரம் என்றும், ஒலிவ்விருட்சம் என்றும் புகழப்படுகிருள். இன்னும் வெள்ளைப்போளத்தினுலும், சாம்பிராணித் தூபத்தினுலும், பரிமளவர்க்கங்களைக் கூட்டுவோருடைய சகலவித சுகந்தப்பொடியினுலும் உண்டாகிய வாசனைப்புகைபோல வனாந்தரத்தின் ஊடாக எழுந்து வரும் மங்கை என்று விபரிக்கப்படுகிருள்.

இவ்வண்ணமாக இயற்கைப்பொருள்கள் யாவும் அவளது வணக்கத்துக்கு உரியவையாகின்றன. தேவதாயார் உலகத்திற்கோர் உதயதாரகை. விடிவெள்ளி. மோட்சத்தின்வாசல் அவள். பாவிகளின் அடைக்கலம் அவள். யாக்கோப்பின் ஏணியும் அவளே. எம் அன்னையும் ஆதரவும் அவளே.

தேவதாயாரே "என் ஆத்துமமானது என்ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது. என் இரட்சணியமாகிய சர்வேசுரனிடத்தில் என் மனமும் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கின்றது.

[5-ம் பக்கம் பார்க்க]

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 30 Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday September 1- 1962

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org